விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம் 1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 31 வியாழக்கிழமை (15.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 208

## எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நாடு முழுமையாக திறக்கப்படும் சாத்தியம்

### தடுப்பூசியை அனைத்து மக்களும் பெற்றிருப்பர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நம்பிக்கை



(கொழும்பு)
எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் நாடு முழுமையாக திறக்கப்படும் என எதிர்பார்ப்பதாக கோவிட் - 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத் 19

நெடுங்கேணியில்
## ஆண் ஒருவரின் சடலம் மீட்பு


(வவுனியா)
வவுனியா வடக்கு - நெடுங்கேணி, பட்டுக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில், இலங்கட்டிக் குளத் 19

19 பெண்கள் உட்பட
## கோவிட்டால் 37 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா 3ஆவது அலைத் தாக்கம் தொடர்ந்து வரும் நிலையில் பெண்கள் 19 பேர் உட்பட மேலும் 37 பேர் உயிரிழந்துள்ளனர். 19

# வடமராட்சியில் கோவிட் கொத்தணி

## எழுமாற்றுப் பரிசோதனையில் 56 பேருக்கு தொற்று உறுதி



(கரணவாய்)
வடமராட்சியில் புதிய கொரோனாக் கொத்தணி உருவாகியுள்ளது. பருத்தித்துறை நகரை அண்டிய பகுதி மற்றும் வல்வை ஆதிகோவிலடியில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்று பரிசோதனையில் 6 வயது சிறுமி, பொலிஸார் உட்பட 56 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

கொரோனா
## +1453

(கொழும்பு)
இலங்கையில் மேலும் 1453 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
சுகாதார அமைச்சின் தொற்று நோயி 19

யாழ்.குடாநாட்டில்
## கொரோனாவால் மேலும் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டில் மேலும் ஒரு கோவிட் - 19 மரணம் நிகழ்ந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் 19

## இராஜதந்திரிகளுடன் பசில் கலந்துரையாடல்



(கொழும்பு)
நான்கு நாடுகளின் இராஜதந்திரிகள், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் இருவர் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவை நேற்று சந்தித்தனர்.
ஐக்கிய அமெரிக்கா, 19

## கோவிட் அச்சம் குறையவில்லை 4ஆம் அலை ஏற்படலாம்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)
நாட்டில் கொரோனா வைரஸ் பரவலின் அச்சுறுத்தல் இன்னமும் குறையவில்லை என்பதைப் பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
ஏற்கெனவே எமது நாட்டில் திரிபடைந்த டெல்டா வைரஸ் தொற்றாளர் 19

புதுக்குடியிருப்பு வள்ளுவர்புரத்தில்
## குடும்பப் பெண் உட்பட மூவர் மீது வாள்வெட்டு

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வள்ளுவர்புரம் கிராமத்தில் இளைஞர் குழு ஒன்று வீடு புகுந்து வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதில் இளம் குடும்பப் பெண் 19

## இலங்கையில் அடுத்த வருடம் வறுமை மேலோங்கும்

### ஐ.தே.க தலைவர் ரணில்

(கொழும்பு)
இலங்கையில் அடுத்த வருடம் வறுமை மேலோங்கி காணப்படும் என ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் வெளியிட்டிருக்கும் விசேட அறிக்கையிலேயே அவர் மேற் 19

கிளிநொச்சியில்
## 12 பேருக்கு கொரோனா

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட் 19

யாழில் 99 பேர் உட்பட
## வடக்கில் நேற்று 111 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற பரிசோதனைகளில் யாழ்.மாவட்டத்தில் 99 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 111 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 19

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை தம்பாட்டியில் 14 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை தம்பாட்டி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தம்பாட்டி நண்டு பதனிடும் தொழிற்சாலையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் தம்பாட்டிக்கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் 60 பேரிடம் நேற்று முன்தினம் (13) மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 06 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று 82 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 08 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

# நாட்டில் 36 சதவீதமானோர் கோவிட் தடுப்பூசியின் ஒரு டோஸையாவது பெற்றுள்ளனர்


(கொழும்பு)

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 36 சதவீதம் பேர் கோவிட்-19 தடுப்பூசியை குறைந்தபட்சம் ஒரு டோஸ் பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர், மருத்துவர் ரஞ்சித் படுவந்துடாவ இதனைத் தெரிவித்தார்.

இரண்டாவது டோஸ் பெற்ற பின்னர் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் சுமார் 13 சதவீதம் என்றும் அவர் கூறினார். (ம-03)

# 3 ஆட்லரி ஷெல்கள் சரசாலையில் மீட்பு



(சரசாலை)

தென்மராட்சி பகுதியில் சரசாலை-பருத்தித்துறை வீதியில் இடம்பெற்று வருகின்ற வீதி அபிவிருத்திப் பணியின் போது நேற்று புதன்கிழமை மதியம் மூன்றுஆட்லிஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

வீதி அகலிப்பு பணியின் போது குறித்த 122மில்லிமீற்றர் அளவுடைய மூன்று எறிகனைகள் இனங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-03,30)


## காணி விற்பனைக்கு

உரும்பிராயில் கிருஸ்ணன் கோவில் அருகாமையில் பிரதான வீதியில் 1 1/2 பரப்பு காணியும் நல்லூர் - செம்மணி வீதியில் நாயன்மார்கட்டில் 7 பரப்பு காணி 2 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும். (7229)

077 623 4204



## மணிவிழாக் காணும் நாயகனை மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

15.07.2021



உயர்திரு

செல்லத்துரை தேவரஞ்சன்

Coordinator, STEPS Institute,
Ministry of Education, North Province

வடமாகாண சாரணர் பயிற்சி இணைப்பாளர், செயலாளர் - மதுரம் கிட்ஸ் முன்பள்ளி

எண்ணிய கருமமதை சென்னியிற் கொண்டு
எளிதில் முடிக்கும் சாரணச் சிற்பி
பல்லாயிரம் மாணவர் பண்பொடு தோன்றிட
பாதை காட்டிய கட்டளைநாயகன்
அரச பணிதனில் தன் பணி கடந்து
அயராதுழைத்த அரும்பெரும் சேவகன்
அவனியில் வாழ்க என்றும் பல்லாண்டு.

இருபது அகவைகள் இணையிலா நட்பொடு
இணைந்திருக்கும் இன்முகத் தேவா
எமது நிறுவனம் ஏற்றமுற
ஏணிப்படியாய் என்றும் இருப்போன்
தன்நலமற்ற சேவையால் உயர்ந்தோன்
தரணியில் வாழ்க என்றும் பல்லாண்டு.

(C-2352)

நிர்வாக இயக்குநர், மதுரம் கல்வி நிறுவனம், டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.

நட்புடன் வாழ்த்தும், திரு. S.K. கிருபாகரன்



## மரண அறிவித்தல்



### திரு. சிதம்பரப்பிள்ளை கணேசமூர்த்தி

கரவெட்டி கிழக்கு கவுந்திலை பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தி கட்டையடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சிதம்பரப்பிள்ளை கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற வடமராட்சி சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர்) நேற்று முன்தினம் (12.07.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற இராமநாதன், கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரவியநாயகியின் அன்புக் கணவரும் வித்தியா, அகல்யா, சந்திரிக்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் சங்கர், லக்ஷ்மன், பரசுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஷா, நிதுஷா, லத்திகா, அனஸ், சஜீ, வருஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2021.07.15) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி மத்தி, கட்டையடி.

குடும்பத்தினர்



## நன்றியும் வாழ்த்தும்



வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக கலாநிதி த. மங்களேஸ்வரன் அவர்களை கௌரவ மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டமைக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

மேலும் துணைவேந்தராகப் பதவி ஏற்கும் கலாநிதி த. மங்களேஸ்வரன் அவர்களையும் மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

உயர்கல்வித் தகைமை, அறிவு, நிர்வாக அனுபவம், ஆளுமை, நிர்வாகத்திறன், சிறந்த தலைமைத்துவப் பண்புகள் கொண்ட கலாநிதி த. மங்களேஸ்வரன் அவர்களுக்குரிய நியமனம் மிகப் பொருத்தமானது. அவருக்காக எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

(7224)

வாழ்த்துவோர்
யாழ்ப்பாண கல்வியியலாளர் ஒன்றியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவுகளை வழங்குவதற்கான பெறுகைகள் - 2021

அ. தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கீழ்வரும் வைத்தியசாலைக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்குத் த்கைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொதியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| | |
|---|---|
| குறியீட்டு இலக்கம் | NP/04/45/02/RDHS/IDH/CF/2021/01<br>IDH வைத்தியசாலை - கிருஸ்ணபுரம் |
| பெறுகை ஆவணங்களை பெறும், கையளிக்கும் முகவரி | கணக்குக் கிளை,<br>பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,<br>A9 வீதி கிளிநொச்சி. |
| பெறுகைப்பிணைத் தொகை | ரூபா.180,000.00 |
| மீளளிக்கப்படாத வைப்பு | ரூபா 3,500.00 |

1. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ. அத்துடன், சமைத்த உணவுகளை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை மேலே குறிக்கப்பட்ட முகவரியிலே வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமிழ் மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் வேலை நாட்களில் 16.07.2021 ஆம் திகதி தொடக்கம் 28.07.2021 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மேலே தெரிவிக்கப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. பெறுகை ஆவணங்கள் 29.07.2021 ஆம் திகதி 10.30 மணிக்கு முன்பதாக மேலே காட்டப்பட்ட முகவரிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்கள தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 22.07.2021 ஆம் திகதி 11.00 மணிக்கு நடைபெறும்.
8. மேற்குறிப்பிட்ட பெறுகைப்பிணைப்பணம் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.
9. இவ் விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**05.07.2021 அன்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் மாற்றம் தொடர்பானது**

ஆ. தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை அவர்களால் கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகளை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொதியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்கள் கோரப்பட்டன. வழங்குநர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் தற்போதுள்ள நாட்டு சூழ்நிலையை கருத்தில் கொண்டும் கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவு வழங்கலாக மாற்றம் செய்யப்படுகின்றது. அத்துடன் 19.07.2021 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய பெறுகை ஆவணங்கள் 26.07.2021 அன்று 10.30 மணிக்கு முன்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும்.

| இல | வைத்தியசாலைகளின் விபரம் | குறிப்பு இலக்கம் | விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படும், பெற்றுக்கொள்ளப்படும், திறக்கப்படும் முகவரி | மீளளிக்கத்தக்க வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01 | பிரதேசவைத்தியசாலை பளை | NP/K/RDHS/DF/2021/03 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |
| 02 | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | NP/K/RDHS/DF/2021/05 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |
| 03 | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம் | NP/K/RDHS/DF/2021/06 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |
| 04 | பிரதேச வைத்தியசாலை வேரவில் | NP/K/RDHS/DF/2021/07 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

(ரி-2346)

TP- 021 228 5932, Fax- 0212285931 E mail- rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதிச் சேவை ஊடாக போதைப்பொருள் கடத்தல்

(கொழும்பு)

88 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள், சுங்கத் திணைக்கள கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இத்தாலி மற்றும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பொதி சேவை ஊடாக கொண்டு வரப்பட்ட இரண்டு பொதிகளிலிருந்து குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. கொட்டாஞ்சேனை மற்றும் கொழும்பு 02 என்ற முகவரிகளுக்கு இந்தப் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றிலிருந்து 534 கிராம் ஹசிஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஹசிஷ் ரக போதைப் பொருள் எனக் கருதப்படும் 320 கிராம் போதைப்பொருளும் அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள் ளது. அத்தோடு சொக்லேட்டுகள் மற்றும் பாதணிகளுக்குள் மறைத்து வைத்து, குறித்த போதைப்பொருட்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள்தாக சுங்க ஊடகப் பேச்சாளர் பிரதி சுங்க பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார். (நி-5)

## உக்காத லஞ்சீற்களுக்கு ஓகஸ்ட் முதல் தடை

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து பொலித்தீனால் உற்பத்தி செய்யப்படும் உக்கலடையாத லஞ்சீற் பாவனைக்கு தடை விதிக்கப்படுவதாக சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்துடன், அவற்றை உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகித்தல் என்பனவற்றிற்கும் தடை விதிக்கப்படவுள்ளது.

உடனடியாக பாவனையில் இருந்து நீக்குவதற்கான, மேலும் எட்டு வகையான பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் அடங்கிய பட்டியலை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக அவர் தெரிவித்தார்.

அதன்படி, ஒரு தடவை மாத்திரம் பாவனைக்கு உட்படுத்தப்படும் உறிஞ்சு குழாய்கள், பிளாஸ்ரிக்கினால் தயாரிக்கப்படும் கரண்டிகள், முள்கரண்டி, யோகட் கரண்டி மற்றும் கத்திகள், பிளாஸ்ரிக் பைகள், பிளாஸ்ரிக் இடியப்பத் தட்டுகள், பத்திகள் மற்றும் திரி ஆகியவற்றை பொதியிடும் பொலித்தீன் உறைகள், பிளாஸ்ரிக் மாலைகள் மற்றும் பிளாஸ்ரிக் கோப்பைகள் ஆகியவை இதில் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## தொழிற்சங்கத் தலைவர்களை விடுவிக்கக் கோரி எதிர்ப்பு வாகனப் பேரணி



(கொழும்பு)

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர்களை உடனடியாக விடுவிக்குமாறு கோரி வாகன எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், அரச தாதியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கத்தினர் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (நி-5)

# மரண அறிவித்தல்



**பிறப்பு**
**24 - 05 - 1936**

**இறப்பு**
**14 - 07 - 2021**

## திருமதி
# பரமேஸ்வரி புண்ணியமூர்த்தி

**( ஓய்வுநிலை ஆசிரியை – யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை, வதிரி, கரவெட்டி )**

ஓடை, அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி புண்ணியமூர்த்தி நேற்று (14.07.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் கனிஷ்டபுத்திரியும் காலஞ்சென்ற புண்ணியமூர்த்தியின் ( ஓய்வுநிலை ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், சின்னம்மா, கனகசிங்கம், சிவசுப்பிரமணியம் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பவானி, உதயராணி, இராதாகிருஸ்ணன் (ஓய்வுநிலை செயலாளர் - கட்டைவேலி, நெல்லியடி ப.நோ. கூ. சங்கம் ), Dr. ஸ்ரீகணேசன் (வைத்திய அத்தியட்சகர் - மாவட்ட சித்த வைத்தியசாலை, முல்லைத்தீவு), வசந்தி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஸ்ணராஜா, அகிலன், கலாரஞ்சினி, கிருபாகரன், வானதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிருந்தாபன், செந்தூரன், நிலானி, வாகீஸ் (UK), வர்ஜிதா, ஐங்கரன், தேனுகா, சியாம்கரன், சாயிக்கீசன், பைரவி, கீத்சனி, ஸ்ரீதி, கலைவாணி, கௌதமி, யாகீசன், நீரஜா, சியாமளன், கங்காதரன், வருண், சரவணா, நிதின், ஸ்ரீகரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சாமிகா, சாத்விகா, கபினாஸ், ஆஷினி, ஆத்மிக், டியா, லியா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.07.2021) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C- 2355)

**ஓடை, அல்வாய் தெற்கு,**
**அல்வாய்.**

**077 118 8416 (மகன்)**
**077 424 2106 (மகன்)**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகைகளுக்கான அறிவித்தல்
### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

## வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு, அழுக்குத்துணிகள் சலவைச் சேவை, சுத்திகரிப்பு பொருட்களை வழங்குவதற்கான பெறுகைகள் - 2021/2022

தலைவர். பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு, அழுக்குத்துணிகள் சலவைச் சேவை பொருட்களை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாதமுறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2021/ 01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ்.மாவட்டம்) | 10,000.00 |
| 02. | D/JF/2021/02 | உலர் உணவு வழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை | 70,000.00 |
| 03. | D/JF/2021/03 | | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | 16,000.00 |
| 04. | D/JF/2021/04 | | ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி | 45,000.00 |
| 05. | D/JF/2021/05 | | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | 25,000.00 |
| 06. | D/JF/2021/06 | | ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை | 30,000.00 |
| 07. | D/JF/2021/07 | | பிரதேச வைத்தியசாலை, நெடுந்தீவு | 10,000.00 |
| 08. | D/JF/2021/08 | | பிரதேச வைத்தியசாலை,அச்சுவேலி | 10,000.00 |
| 09. | D/JF/2021/09 | | பிரதேச வைத்தியசாலை,கோப்பாய் | 30,000.00 |
| 10. | H/LS/2021/ 01தொடக்கம் 10 வரை | அழுக்கு துணிகள் சலவைச் சேவை | பருத்தித்துறை (அ), பருத்தித்துறை (ஆ) தெல்லிப்பளை (இ), சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய். வேலணை, நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் | 10,000.00 10,000.00 3000.00 |
| 11. | RDHS/CLE-ME/2021-2022 | சுத்திகரிப்பு பொருட்களுக்கான வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை | 10,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02 ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ.விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ.அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொ்ண்டிருத்தல் வேண்டும்.

இ.அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 021 222 3725, 021 222 6253, 021 221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம்முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கிலமொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 15 ஜூலை 2021 ஆம் திகதிவரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்துமூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 30 ஆம் திகதி ஜூலை 2021 அன்று காலை 09.30 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 26 ஆம் திகதி ஜூலை 2021 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக் குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்:** rdhsjaffna 15@gmail .com

(C-2345)

# சினோபார்ம் தடுப்பூசி செலுத்த சிலர் தயக்கம்

(கொழும்பு)

**இலங்கையில் அதிகளவில் போடப்பட்டுவரும் சினோபார்ம் கொவிட்-19 தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள சில தரப்பினர் தயங்கி வருகின்றனர்.**

சில நாடுகள் சினோபார்ம் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டவர்களை முழுமையாகத் தடுப்பூசி போட்டவர்களாக அங்கீகரிக்க மறுப்பதால் பெரும்பாலும் வெளிநாடுகளுக்குச் செல்வோர், வெளிநாடுகளுக்குச் செல்லத் திட்டமிட்டு வருவோர் இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளத் தயக்கம் வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கையில் இதுவரை 3 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு சினோபார்ம் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதில் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் இரண்டு சினோபார்ம் தடுப்பூசிகளையும்பெற்றுள்ளனர்.

நாட்டில் அஸ்ட்ராஜெனெகா - கோவிஷீல்ட் தடுப்பூசி, ஸ்புட்னிக் வி, பைஸர் ஆகிய தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இந்த வாரம் மேலும் கிட்டத்தட்ட 3 மில்லியனுக்கு மேற்பட்ட பைஸர், அஸ்ட்ராஜெனெகா மற்றும் மொடர்னா தடுப்பூசிகள் நாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் தமக்கு விரும்பிய தடுப்பூசியை இலங்கையர்கள் தெரிவு செய்ய முடியாது. அரசு வழங்கும் தடுப்பூசியை மட்டுமே போட்டுக்கொள்ள முடியும்.

தடுப்பூசியைப் போட்டுக் கொண்டால் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாமல்போகலாம். அல்லது வெளிநாடு செல்லும்போது தனிமைப் படுத்தலை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இருப்பினும் உயிர்களை காப்பாற்றுவதும் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதுமே தற்போது அரசின் முன்னுரிமை என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். சினோபார்ம் தடுப்பூசியை அங்கீகரிக்காத நாடுகளில் கனடாவும் ஜேர்மனியும்உள்ளடங்கியுள்ளன.

பைஸர்-பயோஎன்டெக் கொவிட்-19 தடுப்பூசி, மொடர்னா தடுப்பூசி, அஸ்ட்ராஜெனெகா / கோவிஷீல்ட் தடுப்பூசி மற்றும் ஜோன்சன் ஞ ஜோன்சன் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் நாட்டுக்குள்நுழையும்போது அவர்களுக்கு தனிமைப்படுத்தலில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என கனேடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜேர்மனியும் பைஸர், அஸ்ட்ராஜெனெகா, ஜோன்சன் ஞ ஜோன்சன் மற்றும் மொடர்னாவை தடுப்பூசிகளையே அங்கீகரித்துள்ளது.

இதேவேளை, சினோபார்ம் தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தேசிய விளையாட்டு சங்கங்களின் பதிவுகளை இரத்து செய்த நாமல்



(கொழும்பு)

இலங்கையின் ஐந்து தேசிய விளையாட்டு சங்கங்களின் பதிவுகளை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு தற்காலிகமாக இரத்துச் செய்துள்ளது.

இது தொடர்பான விசேட வர்த்தமானி நேற்று முன்தினம் இரவு விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம் இலங்கை ஜூடோ சங்கம், இலங்கை ஸ்கிரப்பல் சம்மேளனம், இலங்கை சர்பிங் சம்மேளனம், இலங்கை ஜூஜிட்சு சம்மேளனம் ஆகியவற்றின் பதிவுகளே தற்காலிகமாக இரத்தாகியுள்ளன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது

## திருடப்பட்ட பொருட்களும் மீட்பு



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் மூன்று நாட்களுக்கு முன்னர் திருட்டு இடம்பெற்றிருந்தது. அது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேக நபர்கள் இருவரைக் கைது செய்ததுடன் திருட்டுப் பொருட்களையும் அவர்களிடம் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபர்களிடமிருந்து திருடப்பட்ட ஐ போன் ஒன்று, நாலு சைக்கிள்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். சுன்னாகம் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இருவரே நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவரும் வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புள்ளமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (4-7-6-33)

# சபை எடுக்கும் தீர்மானங்களுக்கு சபையே பொறுப்பு

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி மன்றங்களில் சபை எடுக்கும் தீர்மானங்களுக்கு சபையே பொறுப்பு எடுக்கும் தீர்மானங் களை நடைமுறைப்படுத் துவது மாத்திரமே செயலாளரின் கடமை என சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் க.வாமதேவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சனசமூக நிர்வாகத்தினர் பிரதேசசபை செயலாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கும் நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்திய செயலாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

சபை எடுக்கும் தீர்மானங்களுக்கு சபையின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களே பொறுப்பு. சபை எடுக்கும் தீர்மானங்களை செயற்படுத்துவது மாத்திரமே செயலாளரின் கடமை என மேலும் அவர் தெரிவித்தார்.

சனசமூக நிலையம் ஒன்றினை பிரதேச சபையின் பதிவுக்கு உட்படுத்துவது தொடர்பாக சபையின் தீர் மானத்தை நடைமுறைப்படுத்திய செயலாளருக்கு எதிராக சனசமூக நிலைய நிர்வாகத்தால் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-7-30)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென் மராட்சி நுணாவில் மேற்கு பத்திரகாளி அம்பாள் வீரபத்திரர் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ தே.குரு ராஜசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-6-7)

# யாழில் பல பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் பரிசோதனை

(குப்பிழான்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனின் கட்டளைக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம், ஆவரங்கால், கரவெட்டி, நெல்லியடி, மந்திகை, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு விலை தொடர்பான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன்போது விலைகள் காட்சிப் படுத்தப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது.

மேலும், உரம் தொடர்பான முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டதுடன் சட்டவிரோதமான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்கள் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. (7-4-18)

# தடைப்பட்ட பரீட்சைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 காரணமாக யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் 5,6 இன் I,II,III ஆம் அரையாண்டிற்கான (NVQ Level-5&6, Semester-I,II,III) தடைப்பட்ட பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று ஆரம்பிக்க உள்ளது என தொழில்நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார். (4-7)

# மாதாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் மாதாந்த செயற்குழு கூட்டம் கடந்த சில மாதங்களாக நாட்டின் நிலைமை காரணமாகத் தடைப்பட்டு இருந்தது. தற்போது கூட்டங்கள் வைப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் யாழ்.பிரதேச செயலக மண்டபத்தில் மாதாந்த கூட்டம் நடைபெறும் என பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய யாழ்ப்பாண பிரதேச சங்க தலைவர் அறிவித்துள்ளார். (4-7-108)




# உலருணவு வழங்கல்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட செயலக முன்னாள் திட்டமிடல் பணிப்பாளரும், தென்மராட்சி பிரதேச செயலகத்தின் முன்னாள் செயலாளருமாகிய அமரர் க.கேதீஸ்வரன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் 50 குடும்பங்களுக்கு நேற்று புதன்கிழமை உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த உலருணவுப் பொதிகள் நுணாவில் சர்வோதனா சங்க சனசமூகத்தினூடாக குறைந்த வருமானமுடைய 50 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (4-7-6-30)



விவசாய உற்பத்திகளைப் பாதுகாக்கும் வகையில் விவசாய அமைச்சினால் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் ஊடாக உலக வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்படும் விவசாய களஞ்சியத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று குப்பிழான் விவசாய சம்மேளன வளாகத்தில் சம்மேளனத் தலைவர் செ.நவரத்தினராசா தலைமையில் இடம்பெற்றது. (படம்: ரவிசாந்)



யாழில் தற்போது கடும் வெயிலுடனான காலநிலை நிலவி வரும் நிலையில் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் இளநீர் வியாபாரம் தற்போது சூடு பிடித்துள்ளது.

(படம்:-ரவிசாந்)

# தற்கொலைக்கு முயற்சித்த சிப்பாய் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தூக்கிட்டு தற்கொலைக்கு முயற்சித்த தமிழ் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

குறித்த சிப்பாய் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள படை முகாம் ஒன்றில் கடமையாற்றி வரும் நிலையில் தற்கொலைக்கு முயற்சித்த சமயம் சக வீரர்களால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-7-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட பலர் அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தற்போது முல்லைத்தீவிலுள்ள விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே சம்பளப் பிரச்சினை உள்ள நிலையில் தற்போது ஆர்ப்பாட்டம் செய்தவர்களை அரசாங்கத்தினால் குறித்த நபர்கள் தனிமைப்படுத்தியமைக்கு எதிராக நாட்டில் உள்ள 14 ஆசிரியர்கள் சங்கங்கள் இணைய வழியான பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே பாடசாலைகள் கொரோனா அச்சம் காரணமாக மூடப்பட்டுள்ள நிலையில் மாணவர்கள் ஆசிரியர்களின் போராட்டம் காரணமாக மேலும் இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஆசிரியர்கள் நடத்தி வருகின்ற போராட்டத்தை தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும் நாளை வெள்ளிக்கிழமை இது குறித்து பேச்சு நடத்தவிருப்பதாகவும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (நி-5)

# பொருளாதாரம் படுவீழ்ச்சி பாரிய அழுத்தத்தில் மக்கள்

## எரான் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டு மக்கள் தற்போது அதிக அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர். நமது நாடு சுதந்திரமடைந்ததன் பின் பாரியளவு பொருளாதார தாக்கத்தை இப்போது எதிர்கொண்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரம ரத்ன தெரிவித்துள்ளார்.

ஒருபுறம் வருமானம் குறைவடைந்துள்ளது. பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. வருமானம் எவ்வகையிலும் அதிகரிக்கப்படவில்லை. அத்துடன் வேலைவாய்ப்புப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்தே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். (நி-5)

# வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தை அதிகரிக்க யோசனை

(கொழும்பு)

**தேர்தலில் போட்டியிடும் போது செலுத்த வேண்டிய கட்டுப்பணத் தொகையில் திருத்தங்களை மேற்கொள் வதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதியினால் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிககப்பட்டதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், ஜனா திபதி தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல் களிலும் செலுத்த வேண்டிய கட்டுப்பணத் தொகையில் திரு த்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தேர்தலில் களமிறங்கும் சுயாதீன வேட்பாளர்கள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட கட்டுப்பணத் தொகை,கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி கள மிறங்கும் வேட்பாளர்களும் செலுத்தும் படியான வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என் குறித்த அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் சுயாதீன உறுப்பினர் ஒருவர் 75,000 ரூபா கட்டுப்பணம் செலுத்தும் நடைமுறையே தற்போது அமுலிலுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படு த்தி ஜனாபதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரால் 50,000 ரூபா கட்டுப்பணமாக செலுத்தப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த கட்டுப்பணத் தொகையை 3 மில்லியன் ரூபாவாக அதி கரிக்குமாறு அமைச்சரவைப் பத்திரத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்களில் அத்தியாவசியமின்றி வேட்பாளர்கள் களமிறங்குவதை தடுக்கும் வகையிலும் பொதுமக்களின் பெருமளவு பணம் வீணாக செலவிடப்படுவதை தடுக்கும் வகையிலும் கட்டுப்பணத் தொகையில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான அமைச் சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 29¼ செவ். சூரி 9 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: தற்காலிக நகை வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்<br>தொ.இ: B/11929 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 60 செவ் 1 சூரி 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வங்கி, கணக்காளர், பொறியியலாளர், முகாமையாளர்<br>தொ.இ:G/11953 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 1 சூரி 11 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: வங்கி நிறைவேற்று அதிகாரி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, தகுந்தவரன்<br>தொ.இ: B/11930 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: செவ். சூரி 10 இல்<br>தகைமை/தொழில்: அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், மணமகள் விவாகரத்து ஆனவர்.<br>தொ.இ:G/11962 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: செவ். சூரி 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Electrician & Plumber<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11931 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: செவ் 2 சூரி 4 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: அவுஸ்திரேலியா PR உண்டு<br>எதிர்பார்ப்பு: உள்நாடு வெளிநாடு/ அவுஸ்திரேலியா/வெளிநாட்டில் வசிப்பவர்<br>தொ.இ:G/11963 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: செவ் 2 சூரி 4 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: அரச உயர் அதிகாரி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச தொழில்<br>தொ.இ: B/11932 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: இந்து<br>கி.பா: 65 செவ் 8 சூரி 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Accountant (GOV)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ:G/11967 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

# கிருஷ்ணா அடைவு கடை

## பதிவு இல J/DS /BR/ 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2020 ஆம் ஆண்டு 31.07.2020 இற்கு முன்னர் அடகு நகைகள் யாவற்றையும் 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி 15.08.2021 இற்கு முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.08.2021) ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு: 2020 ஆம் ஆண்டு 05 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

(3934)

307, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311

உரிமையாளர்: 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046

# மணி விழா வாழ்த்து




திருமதி. சுகந்தினி சதாசிவமூர்த்தி

(நூலகர் தரம்– I)

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 07 வருடங்களாக பிரதம நூலகராக பொறுப்பேற்று சிறப்பாகக் கடமையாற்றி 15.07.2021 ஆம் திகதி இன்று தனது அறுபதாவது அகவையில் ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி அவர்களுக்கு எமது பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர் தமது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புடனும், உடல், உள ஆரோக்கியத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

(7215)

ஊழியர் நலன்புரிச்சங்கம், பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பகுதி விவசாயிகளுக்கு

## மானிய உரம் முழுமையாக வழங்கப்படவில்லை

(கண்டாவளை)


**கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் சிறுபோக நெற் செய்கை மேற்கொண்டுள்ள ஒரு பகுதி விவசாயிகளுக்குரிய மானிய உரம் இது வரை முழுமையாக வழங்கப்படாமையினால் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு குளத்தின் கீழ் இவ்வாண்டு 17,500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஒருபகுதி விவசாயிகளுக்கு முழுமையாக சிறுபோக செய்கைக்கான மானிய உரம் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட ஒருதொகை விவசாயிகளுக்கு பகுதி அளவிலேயே மானிய உர விநியோகம் மேற்கொள்ளப்பட்டது

இதே வேளை சட்ட ரீதியாக பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ள சில விவசாயிகளுக்கு பல்வேறு காரணங்களைக் காட்டி உர விநியோகம் தடுக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் தங்களுடைய உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள் தங்களுக்கு தேவையான உரத்தினை கமநல சேவை நிலையங்கள் ஊடாக கடந்த காலங்களில் வழங்கிய போதும் தற்போதைய சிறுபோகத்தில் போதிய உரம் வழங்கப்படவில்லை. அதனைவிட தனியார் வர்த்தக நிலையங்களில் அதிகூடிய விலைகளிலும் உரங்களை விற்பனை செய்தன. அதனால் அவற்றை பெற்றுக் கொள்வதிலும் பெரும் கஷ்டங்கள் காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் மிகுதியான மானியத்தை விரைவாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளனர். (7-4-315)



வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணை வேந்தர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

(படம்:-சதீஸ்)

# நாட்டுப் படகில் 1350 கிலோ மஞ்சள் மீட்பு



(முறிகண்டி)

தனுஷ்கோடி கடற்கரை வழியாக இலங்கைக்கு சட்டவிரோதமாக சமையல் மஞ்சள் கடத்த இருப்பதாக மண்டபம் மெரைன் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் காலை மண்டபம் அருகே உள்ள வேதாளை கடற்கரை பகுதியில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது வேதாளை மீன்பிடி துறைமுகம் கடலில் பதிவு எண் இல்லாத சந்தேகத்திற்கு இடமான முறையில் நாட்டு படகு ஒன்று நின்றுள்ளது.

அதனை சோதனை செய்த போது படகிற்குள் இலங்கைக்கு கடத்துவதற்காக 1350 கிலோ சமையல் மஞ்சள் மூடைகள் இருந்தது தெரிய வந்தது.

இதனையடுத்து நாட்டுப் படகுடன், சமையல் மஞ்சள் மூடைகளை பறிமுதல் செய்த மெரைன்பொலிஸார் மண்டபம் மெரைன் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வந்து வழக்கு பதிவு செய்து தப்பி ஓடியவர்களை தேடி வருகின்றனர். (7-4-100)

# மன்னாரில் தொடர்ச்சியாக சிற்றாலயங்கள் மீது தாக்குதல்

(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள மூன்று இடங்களில் அமைந்துள்ள கத்தோலிக்க சிற்றாலய சொரூபங்கள் மீது நேற்று அதிகாலை இனம் தெரியாத நபர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் வயல் வீதி பகுதியில் காணப்படுகின்ற இரு சொரூபங்களும் மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் அமைக்கப்பட்ட சொரூபம் ஒன்றும் உள்ளடங்கலாக மூன்று சொரூபங்கள் மீது கற்கள் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த சொரூபங்கள் வைக்கப்பட்டுள்ள கண்ணாடி கூடு உடைந்து சேதமாகி உள்ளது. குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸார் மற்றும் "சோகோ" பொலிஸார் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7-4-265)

# அரச பேருந்து திருப்பி அனுப்பி வைப்பு

(நெளுங்குளம்)

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வவுனியா போக்குவரத்துச்சாலைக்கு சொந்தமான பேருந்து ஈரப்பெரிய குளம் சோதனைச் சாவடியில் திருப்பி அனுப்பப்பட்டது.


அத்தியாவசிய தேவைகளின்றி பயணித்தவர்களை ஏற்றிச் சென்றதன் காரணமாக குறித்த பேருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் மாகாணங்களுக்கு இடையில் பேருந்துகளில் பயணிப்பதற்கு நேற்று முதல் மட்டுப்படுத்தப்பட்டளவில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த பேருந்தில் பயணித்தவர்களில் அத்தியாவசிய தேவை நிமித்தம் செல்கின்றமையை உறுதிப்படுத்த தவறியுள்ளனர்.

இதனால் குறித்த பேருந்து ஈரப்பெரியகுளத்தில்வைத்து மீண்டும்வவுனியாவிற்கு திருப்பிஅனுப்பப்பட்டுள்ளது. (7-4-299)

# கட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(கண்டாவளை)

தடைசெய்யப்பட்ட கட்டுத்துப்பாக்கியை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் மாலை மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் மற்றும் உயிலங்குளம் பகுதியை சேர்ந்த இருவர் கைதாகியுள்ளனர்.

மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து குறித்த இரு சந்தேக நபர்களும் கைதாகியுள்ளனர்.

விசாரணைகளின் பின் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஞான துசார மேலும் தெரிவித்தார்.

(7-4-315)



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கௌதாரிமுனை பகுதியில் உள்ள கல்முனை பகுதியில் சீன நிறுவனத்தின் கடலட்டைபண்ணை சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் குறித்த கடல் அட்டைப்பண்ணையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் நேரில் சென்று பார்வையிட்டு களநிலவரங்களை ஆராய்ந்தார்.

(படம் :- சப்தசங்கரி)



தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 32 ஆவது வீரமக்கள் தினம் வவுனியா கோயில்குளத்தில் அமைந்துள்ள க.உமாமகேஸ்வரன் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) யின் வவுனியா மாவட்ட அமைப்பாளர். தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

(படம் :-சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

15.07.2021
ஆனி 31, வியாழக்கிழமை
பஞ்சமி காலை 6.08 மணிவரை
சஷ்டி பின்னிரவு 4.33 மணிவரை
உத்தராடம் பின்னிரவு-2.26 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை
இராகுகாலம் 1.30-3.00 மணிவரை
சந்திராஷ்டமம்:-அவிட்டம், சதயம்
குமார சஷ்டி விரதம், ஆனி உத்தர தரிசனம்.

வளவன்

**மேஷம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், கௌரவமான நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** — யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** — விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கூட்டு முயற்சிகள் வெற்றி, தரும், குடும்ப மகிழ்ச்சி வெற்றி தரும், புதிய நபர்களின் அறிமுகமுண்டு.

**சிம்மம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கன்னி** — ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** — நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** — செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப ஒற்றுமை கூடும், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், போசன சுகமுண்டு.

**மகரம்** — குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்** — கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், பிரயாண பயமுண்டு.

**மீனம்** — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், உறவினர்களின் வருகையில் சிந்தை மகிழ்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

நம்பிக்கையில்லாத இடத்தில் அன்பு இருக்காது.

# இயற்கை பசளை உற்பத்தி தொழிற்சாலை திறந்து வைப்பு

(முறிகண்டி)

கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கத்தின் இயற்கை பசளை உற்பத்தித் தொழிற்சாலை நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனினால் திறந்து வைக்கப்பட்டது.

50 சிறுகைத்தொழில் திட்டத்தின் கீழ் 7.5 மில்லியன் நிதியில் குறித்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதுடன், இரண்டு உழவு இயந்திரம் மற்றும் பதனிடல் இயந்திரங்கள் அடங்கலாக அமைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட செல்வாநகர் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த இயற்கை பசளை உற்பத்தி தொழிற்சாலை தனது பணியை ஆரம்பித்துள்ளது. (7-4-100)

# முல்லைத்தீவில் 15 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்வு

(நெளுக்குளம்)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் முயற்சியில் மன்னார் மற்றும் முல்லைத்தீவில் 15 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாக ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டின் கல்வியை மேம்படுத்தும் வகையில் அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் ஆயிரம் மாகாண பாடசாலைகளில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தும் செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பதினைந்து பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

இதன்மூலம் மேற்படி பாடசாலைகள் நேரடியாக தேசிய கல்வி அமைச்சின் கீழியங்குவதுடன் கூடிய வளங்களைப் பெற்று பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில் சிறப்பான பங்களிப்பினை வழங்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தரமுயர்த்தப்பட்ட குறித்த பாடசாலைகளின் பெயர்களை மாற்றம் செய்து பெயர்ப் பலகைகள் இடுவதற்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா ஒரு மில்லியன் ரூபாய் கல்வியமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ளது. (7-4-299)



கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஐம்பது மில்லியன் செலவில் புதிய நெல் களஞ்சியசாலை அமைக்கப்படுவதற்கான நிகழ்வு நேற்றையதினம் கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கடற்றொழில் அமச்சர் டக்ளஸ் தேவானந்த, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர், பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை நிதி அமைச்சருக்கு இந்திய நிதி அமைச்சர் வாழ்த்து

(கொழும்பு)

புதிய நிதியமைச்சராக பொறுப்பேற்றுள்ள பசில் ராஜபக்ஷவிற்கு இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

வாழ்த்து கடிதத்தை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவை நேரில் சந்தித்து கையளித்துள்ளார். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் பின்னர் உலகளாவிய பொருளாதார மீட்சி என்ற பின்னணியில் பொருளாதாரத்துறையில் பரஸ்பர நலன்களுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்து



இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர். நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பதவியேற்றதன் பின்னர் சந்திக்கும் வெளிநாட்டு இராஜதந்திரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தில் இருந்து மீள்வது குறித்து இலங்கை அதிக கவனம் செலுத்தியுள்ள நிலையில் பொருளாதார விடயங்களில் ஆசிய வலய நாடுகள் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நிதியமைச்சர் உள்ளார். அவ்வாறானதொரு பின்னணியில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை முக்கியமானதாகும். (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்மூழ்கிக் கப்பலை அழிக்கும் விமானம் இந்தியா வருகை




(டில்லி)

நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்கவல்ல 10 ஆவது பி-8ஐ போர் விமானம் அமெரிக்காவில் இருந்து இந்தியா வந்தடைந்தது.

அமெரிக்காவின் போயிங் நிறுவனத்திடமிருந்து 8 பி-8ஐ போர் விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு கடந்த 2009 ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டது.

அதையடுத்து, கூடுதலாக 4 போர் விமானங்களை வாங்க கடந்த 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. 9 ஆவது பி-8ஐ போர் விமானம் கடந்த ஆண்டு நவம்பரில் இந்தியாவுக்கு வந்தது. தற்போது 10 ஆவது போர் விமானம் வந்தடைந்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "கடந்த 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2 ஆவது போர் விமானம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதோடு மட்டுமல்லாமல், பேரிடர் மீட்புப் பணிகளிலும் பி-8ஐ போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. போர் விமானங்களை இயக்குவதில் இந்திய கடற்படையினருக்கு போயிங் நிறுவனமே பயிற்சி அளித்து வருகிறது.

அந்தப் போர் விமானங்களுக்குத் தேவையான உபகரணங்கள், பராமரிப்பு சேவைகள் உள்ளிட்டவற்றையும் அந்நிறுவனமே வழங்கி வருகிறது" எனக் குறிப்பிட்டுள்ளது. (7-4)

# உலகில் ஆ...
# வைரஸாக...

(நியூயோர்க்)

**உலக அளவில் ஆதிக்கம் செலுத்தும் ... விரைவில் மாறும் என உலக சுகாதார அ... டெட்ரோஸ் தெரிவித்தார்**

104 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவியுள்ள உருமாறிய, "டெல்டா" வகை வைரஸ், தற்போது உலகம் முழுதும் மிக வேகமாகப் பரவி வருவதை அடுத்து, பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் அதிகரிக்க தொடங்கியுள்ளது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் கெப்ரியேசஸ் தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது. உலகம் முழுதும், 10 வாரங்களாக குறைந்து வந்த கொரோனா உயிரிழப்புகள், சமீப நாட்களாக அதிகரிக்க தொடங்கி உள்ளன. தொடர்ந்து நான்கு வாரங்களாக பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை கடுமையாக உயர்ந்து வருகிறது.

உருமாறிய, "டெல்டா" வகை வைரஸ் பரவல், உலகம் முழுதும் வேகம் எடுத்துள்ளதே இதற்குக் காரணம்.

## நடிகர் விஜய்க்கு ஒரு இலட்சம் அபராதம் விதித்த உயர் நீதிமன்றம்



(சென்னை)

இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்த ரோல்ஸ் ராய்ஸ் காருக்கு நுழைவு வரி விதிக்க தடை கோரி நடிகர் விஜய் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்ட நீதிமன்றம் நடிகர் விஜய்க்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்தது.

மேலும் ஒரு இலட்சம் ரூபாய் அபராதத்தை முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு 2 வாரத்தில் செலுத்த வேண்டும் என நடிகர் விஜய்க்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சமூக நீதிக்கு பாடுபடுவதாக பிரதிபலிக்கும் நடிகர்கள் வரி ஏய்ப்பு செய்வது ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ள நீதிபதி எஸ். எம்.சுப்பிரமணியம் நடிகர்கள் ஹீரோக்களாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார். (7-4)

# ஹெய்ட்டி ஜனாதிபதி படுகொலையில் ... செயற்பட்ட அமெரிக்க டாக்ட...

(போர்ட் அவ் பிரின்ஸ்)

ஹெய்ட்டி நாட்டின் ஜனாதிபதியாக கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் இருந்து வந்தவர் ஜோவனல் மோயிஸ்.

கடந்த 7 ஆம் திகதி தலைநகர் போர்ட் அவ் பிரின்சில் உள்ள தனது வீட்டில் மர்மக் கும்பல் ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜோவனல் மோயிசை படுகொலை செய்தது 28 பேரைக் கொண்ட வெளிநாட்டு கூலிப் படை என்பதை ஹெய்ட்டி பொலிஸார் கண்டுபிடித்தனர்.

மேலும் அவர்களில் 26 பேர் கொலம்பியாவைச் சேர்ந்தவர்கள் என்பதும், 2 பேர் ஹெய்ட்டி அமெரிக்கர்கள் என்பதும் தெரியவந்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி ஜோவனல்மோயிஸ்படுகொலையில் மூளையாக செயற்பட்ட அமெரிக்க டாக்டர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இது குறித்து ஹெய்ட்டி பொலிஸ் தலைமை அதிகாரி லியோன் சர்லஸ் கூறியதாவது,

ஜோவனல் மோயிஸ் கொலையில் தொடர்புடைய முக்கிய நபராக அறியப்படும் 63 வயதான கிறிஸ்டியன் இமானுவேல் சனோன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஹெய்ட்டியில் பிறந்து அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் குடியேறியவர் ஆவார். டாக்டரான இவர் அரசியல் நோக்கங்களு டன் தனி விமானம் மூலம் ஹெய்ட்டி வந்துள்ளார்.

# 300 நாட்களை தூங்கியே கழிக்கும் நவீன கும்பகர்ணன்

(ஜோத்பூர்)

இராமாயணத்தில் வரும் கும்பகர்ணன் என்ற பாத்திரம், வருடத்தின் 6 மாதங்களை தூங்கியும் விழித்திருக்கும் மற்ற 6 மாதங்களில் சாப்பிடும் நேரத்தை கழித்து வந்தார் என்பதை நாம் அறிந்திருப்போம்.

ஆனால் ராஜஸ்தான் மாநிலத்தில் ஒருவர் வருடத்தில் 300 நாட்களை தூங்கி கழிக்கிறார். ராஜஸ்தான் மாநிலம், ஜோத்பூரில் இருக்கும் நாகூரைச் சேர்ந்தவர் புர்காராம். இவர் வருடத்தின் 365 நாட்களில் 300 நாட்களைத் தூங்கியே கழிக்கிறார்.

ஆக்சிஸ் ஹைப்பர்சோமியா' என்பது ஒரு தூக்க நோய் ஆகும். தூக்கத்திலிருந்து எழ முயற்சி செய்தாலும், அவர்களின் உடல் ஒத்துழைக்காது. மேலும், அவர்கள் தூக்கம் வருவதற்கு முன்பாக, கடும் தலைவலியால் அவதிக்குள்ளாகுவர். இந்த வகையான நோயை முற்றிலுமாக குணப்படுத்துவது என்பது எளிதான காரியம் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் புர்காராம் 23 ஆண்டுகளாக இந்த விநோத நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

## ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் ஜில்பிடன்



(வோஷிங்டன்)

ஜப்பான் டோக்கியோ நகரில் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8 ஆம் திகதி வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற இருக்கிறது. இதில் பங்கேற்க தகுதி பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் டோக்கியோ செல்ல தயாராகி வருகின்றனர்.

அந்த வகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனின் மனைவியும், அமெரிக்காவின் முதல் பெண்மணி என அழைக்கப்படுபவருமான ஜில் பிடன், டோக்கியோ ஒலிம்பிக் தொடக்க விழாவில் கலந்து கொள்வதற்காக ஜப்பான் செல்வார் என அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது. (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

# திக்கம் செலுத்தும்

# க டெல்டா மாறும்

் வைரஸாக, டெல்டா

அமைப்பின் தலைவர்



தொற்று ஏற்படுத்துவதில் உலக அளவில் ஆதிக்கம் செலுத்தும் வைரஸாக, டெல்டா விரைவில் மாறும் எனவும் தெரிவித்தார்.

மேலும் உலகம் முழுதும் வைரஸ் பரவல் ஒரே மாதிரியாக இல்லை. இருப்பவர்கள், இல்லாதவர்கள் என இரண்டு விதமாக பரவல் பிரிந்துள்ளது. வசதி உள்ள நாடுகள் தடுப்பூசி போடும் பணியை விரைவாக செய்து வருகின்றன. ஏழை நாடுகளில் தடுப்பூசி கிடைப்பதில்லை. அங்கு நிலைமை தற்போது மிக மோசமாக உள்ளது.

சில நாடுகளில் சுகாதார பணியாளர்கள், முன்கள பணியாளர்களுக்கே தடுப்பூசி போடப்படாத நிலையில், மூன்றாவது, "பூஸ்டர் டோஸ்" கேட்டு பல நாடுகள் நெருக்கடி தருகின்றன. இதுபோன்ற நிலைமை தவிர்க்கப்பட வேண்டும்.

தடுப்பூசியே கிடைக்காத நாடுகளுக்கு முதலில் தடுப்பூசிகள் கிடைக்க வழி செய்ய வேண்டும் என அவர் கூறினார். (7-4)

## பஸ் விபத்து; 13 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் 65 பில்லியன் அளவில் முதலீடு செய்து சீனா பல்வேறு கட்டுமான பணிகளை செய்து வருகிறது. சீனா- பாகிஸ்தான் பொருளாதார காரிடார் என்ற பெயரில் சீனா முதலீடு செய்து, பாகிஸ்தானில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக டசு அணையில் நீர்மின்திட்டம் அமைப்பதற்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. இப் பணிக்காக நேற்றுக்காலை பேருந்தில் செல்லும்போது, திடீரென பஸ் வெடித்து சிதறி அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் சீனாவைச் சேர்ந்த 7 பொறியாளர்கள், 2 இராணுவ வீரர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். 39இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். (7-4)

## தென்னாபிரிக்காவில் தொடரும் வன்முறை

(ஜோகன்ஸ்பர்க்)

தென் ஆப்பிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஜூமாவுக்கு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அந்த நாட்டின் அரசியல் சாசன நீதிமன்றம் 15 மாதம் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதையடுத்து ஜேக்கப் ஜூமாவை கைது செய்ய எதிர்ப்பு தெரிவித்து அவரது ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் கடந்த வாரம் ஜேக்கப் ஜூமா பொலிஸில் சரணடைந்தார். அவரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந் நிலையில் ஜேக்கப் ஜூமாவை கைது செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் அவரது ஆதரவாளர்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

டர்பனில் உள்ள ஸென்மன்ட் மருத்துவமனையை தீயிட்டு கொளுத்தினர்.

ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள சோவெட்டோவில் உள்ள வணிக வளாகம் வன்முறையாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

தொடர்ந்து வரும் போராட்டங்களையும், வன்முறைகளையும் கட்டுப்படுத்த 75 ஆயிரம் வீரர்கள் நாடு முழுவதும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தென் ஆப்பிரிக்காவின் வன்முறை-கலவரத்தில் இதுவரை 72 பேர் உயிரிழந்துள்ளனமை குறிப்பிடத்தக்கது. (7-4)

## மூளையாக டர் கைது

ஜனாதிபதி ஜோவனல் மோயிசை கைது செய்வதே தங்களின் முதல் திட்டமாக இருந்ததாகவும் பின்னர் அது மாறியதாகவும் அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

எனினும் இது பற்றிய விரிவான தகவல்களை அவர் வழங்கவில்லை. இது குறித்து அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. எனவும் லியோன் சர்லஸ் கூறினார். (7-4)

## கமலா ஹாரிஸ் நூல் வெளியீடு



(வோஷிங்டன்)

தமிழகத்தை பூர்விக மாக உடைய கமலா ஹாரிஸ், அமெரிக்காவின் முதல் பெண் துணை ஜனா திபதி என்ற சிறப்பிற்கு உரி யவர். இவர் கடந்த வந்த பாதை குறித்து, அமெரிக் காவில் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அறிஞர்கள், நிபுணர்கள் உள்ளிட்ட பலரின் கருத்துரைகள், நூல் வடிவம் பெற்றுள்ளன.

"கமலா ஹாரிசும், இந்திய அமெரிக்கர்களின் எழுச்சியும்" என்ற இந்த நூலை, தருண் பாசு தொகுத்துள்ளார். தொழிலதிபர் எம்.ஆர்.ரங்கசாமி நூலை வெளியிட்டுள்ளார். (7-4)

## உலகளவில் கொரோனா

**உயிரிழப்பு :-4 067 199**

**தொற்று :- 188 696 349**

**(நேற்று மாலை நிலவரம்)**

## ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசியால் நரம்புக் கோளாறு

### அமெரிக்காவின் எப்.டி.ஏ.தகவல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் தடுப்பூசி ஒன்றை உருவாக்கி, பயன்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்தத் தடுப்பூசி ஒற்றை டோஸ் தடுப்பூசி ஆகும். ஆனால் இந்த தடுப்பூசியால் 'குய்லின் பார் சிண்ட்ரம்' என்ற அரியவகை நரம்புக் கோளாறு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்த வகை நரம்புக் கோளாறு உடலின் நோய் எதிர்ப்பு மண்டலம், நரம்பு செல்களை சேதப்படுத்துகிறது. இதனால் தசை பலவீனம் அடைகிறது.

சில நேரங்களில் பக்கவாதம் ஏற்படுகிறது. இந்தத் தகவலை அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (எப்.டி.ஏ.) வெளியிட்டுள்ளது.

இதுவரை ஒரு கோடியே 28 லட்சம் பேர் இந்த தடுப்பூசியை செலுத்திக் கொண்டதில் ஏறத்தாழ 100 பேருக்கு இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட தகவல்கள் கூறுகின்றன. (7-4)

## மகனைத் தேடி 5 லட்சம் கி.மீ. பயணம் செய்த தந்தை

(பீஜிங்)

சீனாவில் சீனர் ஒருவர் 2 வயதில் கடத்தப்பட்ட தனது மகனை 24 வருடங்களாக தேடி இறுதியில் அவனுடன் இணைந்த நெகிழ்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

கடந்த 1997 ஆம் ஆண்டு [illegible] மாகாணத்தைச் சேர்ந்த குவோ கேங்டாங் என்பவரின் 2 வயது மகன் வீட்டுக்கு வெளியே விளையாடி கொண்டிருந்தபோது கடத்தல் காரர்கள் இருவர் அவனை கடத்தி சென்று விற்று விட்டனர்.

பொலிஸார் அந்த கடத்தல் காரர்களை கைது செய்த போதும் குவோ கேங்டாங்கின் மகனை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதையடுத்து தனது மகனை தானே தேடி கண்டுபிடிக்க முடிவு செய்த குவோ கேங்டாங் தனது மகனைத் தேடி 20 மாகாணங்களில் கிட்டத்தட்ட 5 லட்சம் கி.மீ. பயணம் செய்தார்.

அவரின் இந்த அயராத முயற்சிக்கு 24 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது பலன் கிடைத்துள்ளது. 2 வயதில் கடத்தப்பட்ட தனது மகனை அவர் கண்டு பிடித்து அவனுடன் இணைந்து விட்டார். (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அபாயகரமான சூழ்நிலை ஏற்படலாம்

## பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் புதிய வைரஸ் தொற்றுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக ஆய்வுகளின் மூலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது என பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.**



நாடு வழமையான செயற்பாடுகளுக்காக திறக்கப்பட்டுள்ள நிலையில் கட்டுப்பாடுகள் இல்லாத செயற்பாடுகளினால் மீண்டும் வைரஸ் பரவல் நெருக்கடி நிலையொன்று உருவாக்குமென அவர் தெரிவித்தார்.

நாட்டில் 25 வீதமான மக்களுக்கேனும் இப்போது தடுப்பூசி ஏற்றியிருக்க வேண்டும், ஆனால் 20 வீதமானவர்களுக்கு கூட தடுப்பூசி ஏற்றப்படவில்லை.

நாடு வழமையான செயற்பாடுகளுக்காக திறக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் எந்த வித அச்சமும், கட்டுப்பாடுகளும் இல்லாது சாதாரணமாக செயற்பட்டு வருகின்றனர்.

இந்த செயற்பாடுகள் மீண்டும் நாட்டில் நெருக்கடி நிலைமையை உருவாக்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. எனவே மக்கள் சுகாதார வழிகாட்டலை முறையாக பின்பற்றி செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# பொலிஸ் போல் வேடமிட்டு கொள்ளையிட்ட கும்பல் சிக்கியது

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளாக தம்மை அடையாளப்படுத்தி, கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக மூன்று சந்தேக நபர்கள் வத்தளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் குருணாகல், வத்தளை மற்றும் சேதவத்தை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரிகளைப் போல ஆள்மாறாட்டம் செய்ய சந்தேக நபர்கள் பயன்படுத்திய போலி பொலிஸ் அடையாள அட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் பயணிப்போரை குறி வைத்து, தம்மை பொலிஸ் அதிகாரிகளாக அடையாளப் படுத்தியுள்ளனர்.

பின்னர் அவர்களை நடமாட்டம் குறைந்த பகுதிக்கு அழைத்துச் சென்று, பயணிகளின் பணம் மற்றும் நகைகள் என்பவற்றை கொள்ளையிட்டுள்ளதாகவும் விசாரணைகளில். தெரியவந்துள்ளது.

இதனிடையே இது போன்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாருக்கு மேலும் 17 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அஜித் ரோஹண குறிப்பிட்டார். (நி-5)

# ஹரின் பெர்னாண்டோ கைதாக மாட்டார்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி வரை கைது செய்யப்படமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபர் நேற்று புதன்கிழமை உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக தம்மை கைது செய்வதை தடுக்குமாறு உத்தரவிடக் கோரி ஹரின் பெர்னாண்டோ அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பிரச்சினைகளை கலந்துரையாட பொதுமக்களுக்கு மீண்டும் வாய்ப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களை பொதுமக்கள் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்தித்து தமது பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட உள்ளதாக சபை முதல்வர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முதற்கட்டமாக அதற்கென 10 அறைகள் ஒதுக்கப்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாகவும் எவ்வாறெனினும் அதற்காக ஏழு அறைகளை ஒதுக்க முடியும் என பாராளுமன்ற சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு பிரதம படைக்கல சேவிதர் அறிவித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாராளுமன்றத்தில் எம்.பிக்களை சந்தித்து கலந்துரையாடும் வாய்ப்புகள் கொரோனா வைரஸ் சூழ்நிலை ஆரம்பகட்டத்தில் முழுமையாக தடை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)




### நிரோசன்

நல்ல செருப்புங்க, 300 ரூபா இருக்கும்...உள்ள போறப்ப இருந்தது...வெளிய வந்தால் காணோம்



சரின்னு என் செருப்பையே போட்டுட்டு வந்திட்டேன்

### கயல்விழி

மனைவி: வேலைக்காரி வராததால வீடே சரியில்லைப் பாருங்க



கணவன்: அவ வராததால உனக்கு வீடுதான் சரியில்லை
எனக்கு மனசே சரியில்லை

### கலையரசன்

வாத்தியார்: கரன்ட் போகும் போது முதல்ல எதை எடுப்பீங்க?
டோர்ச் லைட், எமர்ஜன்சி லைட்



இரண்டுமில்லை சேர். அப்பாவின் பொக்கட்டில இருக்கிற பணத்தை எடுப்பேன் சேர்

### மகேசன்


கனவன்: நீ சாப்பாடு போடாம இப்படியே சீரியல் பார்த்துட்டு இருந்தியென்றால் நான் தூக்கில தொங்கிடுவேன்



மனைவி: அப்பிடி ஓரமாய்ப் போய் தொங்குங்க...ரிவி மறைக்குதெல்ல

### நித்திலா

அழகான மனைவி அன்பான துணைவி அமைந்தாலே பேரின்பமே...



அன்பா எங்கம்மா அமையுறாங்க...
பூரா அடங்கப்பிடாரிதான் அமையுறாங்க

### கயன்

என்னடிம்மா...கோவை நைட்டியால ஆண்களுக்குத்தான் அதிக பாதிப்பாமே...!



சனியன் புடிச்ச கிழவி
அது கோவை நைட்டி இல்ல, கொவிட் 19

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விபத்துக்களால் வருடத்திற்கு 3650 பேர் உயிரிழக்கும் நிலை

## அஜித் ரோஹண தகவல்

(கொழும்பு)

**ஜனவரி முதலாம் திகதியிலிருந்து தற்போது வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 1,266 பேர் உயிரிழந்திருப்பதுடன் 7,177 பேர் காயமடைந்துள்ளனர்.**

அதேவேளை வீதி விபத்துக்களால் நேற்று முன்தினம் மாத்திரம் 10 பேர் உயிரிழந்திருக்கின்றார்கள். அதனடிப்படையில் நோக்குகையில் வருடாந்தம் சுமார் 3,650 பேர் வரையில் உயிரிழக்கின்றனர்.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டங்களையும் தண்டனைகளையும் வலுப்படுத்தினாலும் வாகன சாரதிகள் உரியவாறு ஒழுக்கமாக செயற்படாதவிடத்து விபத்துக்களைக் குறைக்க முடியாது என்று குற்றங்கள் மற்றும் வீதிப்போக்குவரத்துக்குத் தொடர்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி-5)

# தொற்றுக்குள்ளான சிங்கம் குணமடைவு



(கொழும்பு)

தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான சிங்கம் தற்போது பூரண குணமடைந்துள்ளதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொற்று உறுதிப்படுத்தப்பட்ட மற்றைய சிங்கமும் குணமடைந்து வருவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார்.

இதனிடையே, தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் ஏனைய விலங்குகளுக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என்பது விலங்குகளிடையே மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பின்னவலை திறந்த மிருகக் காட்சிச்சாலை மற்றும் அம்பாந்தோட்டை சஃபாரி பார்க் ஆகியவற்றிலுள்ள விலங்குகளுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதா? என்பதை கண்டறிவதற்கு வைத்தியக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார். (நி-5)

# 18 வயதுக்குட்பட்டவர்களுக்கும் தடுப்பூசி செலுத்த ஆலோசனை

(கொழும்பு)

18 வயதுக்குக் குறைந்த சிறார்களுக்கும் கொவிட்-19 தடுப்பூசிகளைச் செலுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இது தொடர்பான பரிந்துரைகள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் வேலைத் திட்டம் தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சினோவெக் மற்றும் பைஸர் ஆகிய தடுப்பூசிகள் சில நாடுகளில் பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இதனை இலங்கையிலும் அமுல்படுத்துவது குறித்துக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# ரயில்வே கட்டுப்பாட்டாளரை தாக்கிய இளைஞர்கள்

(கொழும்பு)

முகக்கவசம் அணியாமல் ரயில் ஒன்றில் நுழைய முற்பட்ட இருவரை எச்சரித்த ரயில்வே கட்டுப்பாட்டாளரை குறித்த இருவரும் தாக்கியுள்ளனர்.

வாதுவையில் இருந்து ராகமை நோக்கி பயணித்த ரயில் ஒன்று தெஹிவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்ட போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பின்னர் தெஹிவளை பொலிஸாரினால் குறித்த இளைஞர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

20 மற்றும் 27 வயதுடைய இளைஞர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சேரும் இடம்!

ஒரு ஊரிலே ஒரு இறை நேசர் இருந்தார். அவர் ஒரு நாள் ஒரு தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தார்.

ஒரு சிகை அலங்காரம் செய்யும் கடையைத்தேடி அவர் போய்க் கொண்டிருந்தார்.

அவர் இந்த இறை நேசரைப் பார்த்தார்.

தன் கையிலே இருந்த ஒரு பையை இவரிடம் அன்பளிப்பாகக் கொடுத்தார்.

"ஐயா தயவு செய்து இதை என்னுடைய அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதிலே தங்கக் காசுகளும் பணமும் உண்டு!" என்று சொன்னார்.

இறை நேசர் அதை வாங்கிக் கொண்டு போனார்.

முடி திருத்தும் கடைக்குள்ளே நுழைந்தார்.

அங்கேயிருந்த நண்பர் பக்கத்திலே அதை கொண்டு போய் வைத்தார்.

"ஐயா இது தங்களுக்கு அன்பளிப்பு" என்றார். பின்பு இவர் இருக்கையிலே அமர்ந்தார்.

இந்த இறை நேசருக்கு அவர் சிகை அலங்காரம் செய்ய ஆரம்பித்தார்.

அப்போது அந்த கடைக்கு வெளியிலே ஒரு சத்தம் கேட்டது. யாரோ ஒருத்தர் புலம்பிக்கொண்டிருந்தார்.

"நான் வாழ்க்கையிலே ரொம்பத் துன்பப்படுகிறேன். பணம் இல்லாமல் சிரமப்படுகின்றேன். எனக்கு யாரு உதவி செய்வார்கள்" என்று அவருடைய கஷ்டத்தை அவர் சொல்லிக்கொண்டிருந்தார்.

முடி திருத்தம் செய்கிறவர் காதிலே இது விழுந்தது. உடனே அவர் சைகை காட்டி அந்த ஆளை வரவழைத்தார். அந்தப் பையை சுட்டிக்காட்டி அதை எடுத்துக்கொண்டு போங்கள் என்கிறது மாதிரி சைகை காட்டினார்.

"ஐயா அந்தப் பைக்குள்ளே நிறையப் பணமும் தங்கக் காசுகளும் இருக்கிறதாக என்னிடம் கொடுத்தவர் சொன்னார். ஆனால் நீங்க அதைப் பிரித்துக்கூட பார்க்காமல் இவரை எடுத்துக்கொண்டுபோகச் சொல்லிட்டீங்களே!" என்றார்.

இதுக்கு அந்த முடி திருத்திறவர் சொன்னார்:

"ஐயா தாங்கள் இந்தக் கடைக்குள்ளே நுழைந்ததைப் பார்த்தவுடனே உங்களுக்கு முடி திருத்தம் செய்யிறதுக்குப் பிரதிபலனை எதிர்பார்க்கக்கூடாது. எதையும் வாங்கக்கூடாது என்று என் மனதிலே நினைத்துக்கொண்டேன்.

அதனாலே அந்தப் பைக்குள்ளே விலைமதிக்க முடியாத மாணிக்கம் இருந்தாலும் சரி எனக்கு ஆசை ஏற்படாது.

உங்களுக்கு ஆசையில்லாத காரணத்தால் நீங்கள் அந்தப் பையைப் பிரித்துப் பார்க்கணும் என்று நினைக்கலே.

அந்தச் சிந்தனையும் எனக்கு இல்லை. இறைவனின் நாட்டம் போல அந்தப் பை யாருக்குத் தேவைப்பட்டதோ அவரிடமே அது போய்ச் சேர்ந்து விட்டது." என்றாராம்.

இது ஒரு நண்பர் மூலமாத்தான் தெரிந்துகொண்ட கதை. யாருக்கு எது தேவையோ அது அவர்களிடம் போய்ச் சேருகிறதுதான் முறை.

ஆனால் சராசரி மனிதர்கள் எப்படித் தெரியுமா?

நமக்குத் தேவையில்லாத ஒரு பொருள் நம்மிடம் இருந்தால்கூட அதை அடுத்தவர்களுக்குக் கொடுக்க மனசு வராது!

நம்ம ஆள் ஒருத்தர் நடந்து போய்க்கொண்டிருந்தார் குதிரை வாங்குவதற்காக!

எதிரிலே வந்த ஒருத்தர் இவரிடம் ஒரு கழுதையை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டு போய் விட்டார். இது அவருக்குத் தேவையில்லை.

அதனாலே இவருடைய நண்பர் ஒருத்தர் "இதோ யாரப்பா எனக்குத் தேவை குதிரை. இது கழுதை. அதனாலே இதை எனக்கு அன்பளிப்பாக கொடுத்துவிட்டேன்" என்றார்.

இதுக்கு அவர் "அப்படியெல்லாம் அவசரப்பட்டு கொடுத்துவிடக்கூடாது. கொஞ்சக்காலம் இதை வைத்திருந்து பார்க்கலாம். ஒருநாள் இந்தக் கழுதையே குதிரையாக ஆனாலும் ஆகலாம்.

அப்படி ஆகுதா இல்லையான்னு பார்த்துக்கிட்டு அதுக்கு அப்புறம் இதை உனக்குக் கொடுக்கிறதா? வேண்டாமா? என்று முடிவு பண்ணலாம்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

27

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



தேசிய பிரச்சினை தீர்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடினமான நிலைப்பாட்டை கைவிடுமாறு அவர்களுக்கு கூறுமாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசனிடம் கோரிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டில் இருந்து பார்க்கும் அதே போக்கில் அரசாங்கம் தற்போது (2011) கருதுகிறது என்று நான் நம்புகிறேன். **(Daily Mirror of December 19th 2011 in the news item titled "President asks Mano Ganeshan to talk to TNA").** அதாவது ஒரு கை கொண்டு கைதட்ட எந்த வழியிலும் சாத்தியமில்லை.

இவ்வாறு மாகாண சபைகளின் காணி அதிகாரம் சம்பந்தமாக ஒஸ்டின் பெர்னாண்டோ எழுதிய தனது நீண்ட கட்டுரையில் தனது முடிவுரையை பின்வருமாறு விபரிக்கின்றார்.

மாகாண சபைகளுடன் எந்தவொரு சந்தரப்பத்திலும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருந்து கொண்டு எதிர்க்கும் அரசியல் கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் அதிகாரப் பகிர்வு மற்றும் நல்லிணக்கத்தை பிற்போட்டுவிட்டு அல்லது அதற்கு ஒரு பின்னணி நிலையை வழங்கி, மையமயமாக்கலுடன் செல்லத் தீர்மானித்தால், இங்கு கொடுக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை உடனடியாக புறக்கணிக்க முடியும்.

ஒருவேளை, 13 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வதுதான் நன்மையெனக் கருதி காணி அதிகாரப் பிரச்சினையைத் தீர்க்க நினைத்தால், அது நடக்கும் நாள் இந்தக் கட்டுரை பயனற்றதாகப் போகும்.

அரசாங்கம் செயற்படும் விதம், அதற்கு அதிக அழுத்தம் கொடுத்தால் அது தன் வழியில் இருக்கும் என்பதற்கான அறிகுறியைக் காட்டுகிறது. ஒருவர் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுப்பதால், அவரின் கட்டுப்பாட்டில் பாராளுமன்றம் மற்றும் நாட்டின் முழு அதிகாரமும் இருந்தாலும், அவர் எல்லாவற்றுக்கும் இணங்குவார் என்று எதிர்பார்க்கக் கூடாது. காணி அதிகாரப் பகிர்வுக்கான விடயம் மேலே குறிப்பிடப்பட்ட மோசமான சூழ்நிலைகளில் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதே என் நம்பிக்கை.

காணி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு நியாயமான ஒப்பந்தத்தை வழங்குவதிலிருந்து அரசாங்கம் ஓடி விடுவது அதற்கு மிகவும் சங்கடமாகவும் கடினமாகவும் இருக்கும்.

இந்த கோரிக்கையானது அரசியலமைப்புக்கு இசைவானதும் மிக உயர்ந்த நீதிமன்றங்களின் பதிவு செய்யப்பட்ட நீதித்துறை முடிவுகளால் ஆதரிக்கப்படுகின்றதும் ஆகும்.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அதிகாரப் பகிர்வுக்கு பரிந்துரைக்கும் சூழல் மற்றும் மாற்றத்திற்கான அரசின் உறுதிப்பாட்டின் உண்மையான தன்மையை இலங்கையர்களுக்கு (குறிப்பாக தமிழர்கள் மற்றும் சர்வதேசங்களுக்கு) நிரூபிப்பதற்கான வழிகளை அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கும் போது, தமிழ் அரசியல் அதிகாரிகள் மற்றும் சர்வதேசங்களால் இது இடைவிடாமல் பின் தொடரப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர்.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் போன்ற அரசியல் பேச்சுவார்த்தையாளர்களால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. எனவே அரசாங்கம் புலிகளுடன் செய்ததைப் போல அவர்களை பயங்கரவாதிகள் என்று அழைத்து நழுவவிட முடியாது. காணி நிர்வாகத்தில் அதிகாரப்பகிர்வுக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட அடிப்படையில் அரசாங்கமும் தமிழ் பேச்சுவார்த்தையாளர்களும் ஒருநாள் ஒன்றுபட்டு வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

முன்னர் மேற்கோள்காட்டிய படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மனதில் உள்ள அச்சங்கள் மற்றும் காணி அதிகாரப் பகிர்வு தொடர்பாக விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்க போன்ற அமைச்சர்கள் எடுத்த எதிர்மறையான நிலைப்பாடுகளைப் பொருட்படுத்தாமல் இது மாறாமல் நடக்க வேண்டும். சட்டத்தரணி கோமின்தய சிறி அல்லது டாக்டர் குணதாச அமரசேகர போன்ற தொழில் வல்லுநர்கள் இந்த கோரிக்கையை நிராகரித்ததற்கு காரணம் கூறினாலும் இது நடக்க வேண்டும்.

மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதில் அரசாங்கமும் தமிழ் அரசியல்வாதிகளும் எந்த அளவிற்கு உடன்பட முடியும், எப்படி என்பது முக்கியமான மில்லியன் டொலர் கேள்வி ஆகும்.

இவ்வாறான ஒரு சூழலில் மேற்கூறப்பட்ட முன்மொழிவுகள் அடிப்படையாக இருக்கலாம். மேலும் இந்தவினவலுக்கு பதிலளிப்பதற்கான ஆரம்ப அணுகு முறையாக கருதலாம்.

அதேநேரத்தில், யுத்த வெற்றியே சமரசம் செய்வதற்கும் மிகவும் தைரியமான முடிவுகளை எடுப்பதற்கும் பலத்தை அளிக்கிறது. இத்தகைய முடிவுகளை வெற்றியாளரால் மட்டுமே தேசத்திற்கு விற்பனை செய்ய (எடுத்துரைக்க) முடியும்.

தற்போதைய சூழலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் இந்த சவாலான மேல் நோக்கி பணியை எடுக்க முடியும், வேறு யாரும் இல்லை. 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் கூட அவர் அத்தகைய நிலைப்பாட்டிற்கு தன்னார்வத் தொண்டு செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டதாகத் தெரிகிறது. **(www.dailymirror.lk – January 17th2012 news item titled 'Full implementation of 13th Amend ment plus, MR. tells Krishna).**

இந்த முன்மொழிவுகள் மற்றும் வாதங்களில் ஒருவர் நெளிவு சுழிவுகளைக் காணலாம் என்பதை நான் அறிவேன். அவ்வாறு காணப்பட்டால் அவர்கள் விவாதங்கள் மற்றும் முன்மொழிவை மேம்படுத்தட்டும். இது ஒரு அரசியலமைப்பு கடமையாக இருப்பதால் இது தேவைப்படுகிறது. மேலும் இந்த அரசியல் வாதிகள் அனைவரும் அரசியலமைப்பின் நான்காவது அட்டவணையில் கையெழுத்திட்டு அரசியலமைப்பை ஆதரிப்பதாக அறிவித்துள்ளனர்.

மாபெரும் யுத்த வெற்றியின் பின்னர் சமரசம் செய்வதற்கும் நியாயத்தைக் கொண்டு வருவதற்கும் பகுத்தறிவுடன் சிந்திக்க இது ஒரு வழி என்ற நம்பிக்கையுடன் நான் இந்தக் கட்டுரையை எழுதினேன். இந்தக் கட்டுரை நல்லிணக்கத்திற்கான ஒரு சிறிய பங்களிப்பாக இருக்கலாம், ஆனால், இது நீரோடைகள், நீர் வீழ்ச்சிகள், நீர்த்தேக்கங்கள், ஆறுகள், கரையோரங்கள், கடல்கள் மற்றும் பெருங்கடல்களை உருவாக்கும் மழைத்துளிகள் போன்றது.

இந்தக் கட்டுரையை முடிக்கு முன் மார்க்ட் வைன் (Mark Twain) ஒருமுறை சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது- அதாவது "ஒரு மனிதன் தனது சொந்த ஒப்புதல் இல்லாமல் வசதியாக இருக்க முடியாது." தங்கள் சொந்த அரசியலமைப்பில் உள்ளதை அங்கீகரிக்க முடியாதவர்களுக்கு இந்த வசனம் பொருந்தும். அவர்கள் அவ்வாறு செய்யும் வரை அவர்கள் சங்கடமாக இருப்பார்கள், மேலும் அவர்கள் அக்கறையுள்ளவர்களாக இருப்பார்கள், ஏனென்றால் அவை நாட்டின் அடிப்படை சட்டத்தை மீறுகின்றன. ஒப்புதலுக்கான பரந்த ஆலோசனையும் உரையாடலும் அனைவருக்கும் வசதியாக இருக்கும்.

இவ்வாறு ஒஸ்டின் பெர்னாண்டோ **"Sharing land powers is part of the devolution process enshrined in the constitution"** என்ற ஒரு கட்டுரையை ஆங்கிலத்தில் இணையத்தில் எழுதியிருந்தார். அதன் தமிழாக்கமே இதுவாகும். முழுவதுமாக தமிழாக்கம் செய்யப்படாவிட்டாலும். விளங்கக் கூடிய முறையில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இக் கட்டுரைக்கு இணையத்தில் பலர் நேர் எதிர்மறைக் கருத்துக்கள் எழுதியிருந்தார்கள் அது பற்றி இங்கு ஆராயப் படவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் இடமாற்றம் சந்தேகத்தை தூண்டுகிறது

(கொழும்பு)

கடந்த சில மாதங்களாக தேர்தல்கள் ஆணைக் குழுவில் பணிபுரியும் அனுபவமுள்ள பல அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் செயலாளர் ரஞ்சித் மதும பண்டார ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் குழுவை தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து இவ்வளவு குறுகிய காலத்தில் நீக்குவது கடுமையான சந்தேகத்திற்குரிய விடயமாகும்.

இது தேர்தல்கள் ஆணைக் குழுவின் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். அரசியல் அதிகாரத்தின் செல்வாக்கால் புதிய அதிகாரிகளை நியமிப்பது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்த வழிவகுக்காது என்ற அபாயமும் உள்ளது.

ஜனநாயக நாடுகளில், தேர்தல்களை நடத்துவதற்கு பொறுப்பான நிறுவனம் ஒரு சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற அமைப்பாக செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும்.

எனவே, நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்றம் சாதாரண அரசாங்க விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டது என்று ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## குடும்பத்தை ஒன்றிணைக்கும் சோமவார விரதம்



சோமவாரம் என்பது திங்கட்கிழமையை குறிக்கும். அன்றைய தினம் சிவபெருமானுக்கு உகந்த நாள். 'சோம' என்றால் பார்வதியுடன் கூடிய சிவபெருமான் என்றும், சந்திரன் என்றும் பொருள்படும்.

சந்திரன் கொடிய நோயால் துன் பப்பட்டான். நோய் குணமாக வேண்டி சிவபெருமானை நோக்கி தவம் இரு ந்தான். அவர் அருளால் நவக்கிரகங் களில் ஒருவன் ஆனான். அவன் பெய ரால் சோமவாரம் (திங்கட்கிழமை) தோன்றியது.

'தன்பெயரால் தனது வாரத்தில் மக்கள் விரதம் இருக்க வேண்டும்' என்று சந்திரன் சிவபெருமானை வேண்டிக்கொண்டான். அதனால் சோமவார விரதம் என பெயர் ஏற் பட்டது.

இந்த சோமவார விரதத்தை திங்கட்கிழமையன்று பயபக்தியுடன் கடைப்பிடித்து, சாம்ப பரமேசுவர பூஜையை செய்தால் பிரிந்த குடு ம்பம் ஒன்று சேரும். வெகுதூரத்தில் உள்ளவர்கள் தங்கள் இருப்பிடத்தை நாடி வந்து சேருவர். கணவன்- மனை விக்கு இடையே பிரிவு இருக்காது. மனைவி, குழந்தைகளை விட்டு பிரிந்து சென்ற கணவன், ஓடோடி வந்து சேருவான். அந்த அளவுக்கு இந்த விரதம் மகத்துவம் வாய்ந்தது.

திங்கட்கிழமை அன்று விரதத்தை மேற்கொண்டு சாம்ப பரமேஸ்வர பூஜை செய்தால் சகல செல்வங்களும் கிடைக்கும். 14 ஆண்டுகள் வரை இடையூறு இருக்காது. மாங்கல்ய தோஷம் ஏற்படாது. களத்திர தோஷம், மாங்கல்ய தோஷம் இரு ப்பவர்கள் அவசியம் இந்த விரத த்தை கடைப்பிடிக்க வேண்டும்.

சோமவாரத்திற்கும் ஒரு கதை இருக்கிறது. அதை இப்போது பார்க்கலாம்.

ஒருகாலத்தில் ஆர்யா வர்த்தா நாட்டை சித்ரவர்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய ஒரே மகள் சீமந்தினி. மகள் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்த மன்னன் சித்ரவர்மன், சிறந்த ஜோதிடர்களை வரவழைத்து தனது மகளுக்கு ஜாதகம் எழுதும்படி உத்தரவிட்டான்.

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறை மீறல் 164 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் மேலும் 164 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 49,837 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

## பலாப்பழம் பறித்த சிறுவன் கால்வாயில் விழுந்து மரணம்

(கொழும்பு)

ஹுங்கம பிரதேசத்தில் பலாபழம் பறிக்கச் சென்ற சிறுவன், மரத்துக்கு அருகில் இருந்த கால்வாயொன்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

14 வயதான குறித்த சிறுவன் நோனாகம பிரதேசத்தைச் சேர்ந்தவர். சிறுவன் தனது பாட்டியின் வீட்டிற்கு சென்றிருந்த வேளை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பலாப்பழம் பறிப்பதற்காக சென்ற சிறுவன் வீடு திரும்பாத காரணத்தால் அவரை தேடியபோது, பலா மரத்திற்கு அருகில் உடைந்த கதிரையும் பாதணிகளும் இருந்துள்ளன.

அதற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான தேடுதலையடுத்து சிறுவன் கால்வாயிலிருந்து உயிரற்ற நிலையில் மீட்கப்பட்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹுங்கம பொலிார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 90 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 240 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 40 |
| கோவா | 160 | 160 | 180 | 160 |
| கரட் | 160 | 170 | 180 | 200 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 120 | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 60 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 260 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 260 | 250 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 160 | 150 |
| பயற்றங்காய் | 140 | 150 | 120 | 120 |
| லீக்ஸ் | 180 | 180 | 180 | 200 |
| பீற்றூட் | 160 | 140 | 120 | 160 |
| கறிமிளகாய் | 250 | 200 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 300 | 350 |
| போஞ்சி | 160 | 170 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 25 | 60 | 40 |
| தேசிக்காய் | 140 | 130 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | — | 300 | — |
| வெங்காயப்பூ | 250 | 230 | 140 | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

## தேவதையின் தீர்ப்பு

அதற்குப் பதில் சொல்லாமல் மீண்டும் சிரித்த தேவதை, "சாதாரணமாக பனித்துளி என்பது என்ன தெரியுமா? மேலே உள்ள நீராவியின் மேல் குளிர்ந்த காற்றுப் படும்போது, அது பனித்துளியாக மாறுகிறது.


அந்தப் பனித்துளி மீது நல்ல வெயில் படும்போது, அது மீண்டும் நீராவி யாகிவிடும். அப்படிப் பார்த்தால் நீங்கள் மதியத்திலிருந்து இங்கே காத்திருக்கிறீர்கள்.

என்ன தான் குடுவையில் பனித்துளி சேர்ந்திருந்தாலும்இந்த வெயிலில் சிறிதளவாவது ஆவியாகியிருக்கும். மீதி கொஞ்சம்தான் குடுவையில் தங்கியிருக்கும்.

ஆனால் உங்கள் இருவரது குடுவையும் நிரம்பி வழிகிறதே! இது எப்படி? இதைக் கண்டு சிரிக்காமல் என்ன செய்வது?" என்று கூறியது.

"இப்போது சொல்லுங்கள் உங்களில் அறிவில் சிறந்தவர் யார் என்று?" என்று அவர்களைப் பார்த்துக் கேட்டது தேவதை.

இருவரும் என்ன செய்வது என்று தெரியாமல் தலைகவிழ்ந்து நின்றனர்.



"பார்த்தீர்களா? இது நம் வாழ்வில் தினமும் நிகழும் ஒரு சாதாரண நிகழ்வு. இதைக்கூட நாம் தெரிந்து கொள்ளவில்லை. உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். இந்த உலகில் எல்லாமே தெரிந்தவர்கள், புத்திசாலிகள் என்று எவருமே இல்லை.

இந்த உலகத்தில் உள்ளவர்கள் கற்றுக்கொண்டது வெறும் கையளவு மட்டுமே. கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ உள்ளன.

அவற்றைத் தெரிந்து கொள்ளத்தான் நீங்கள் முயற்சிக்க வேண்டுமே தவிர, இப்படி வீண் விவாதங்கள் செய்து நேரத்தை வீணடிப்பது எவ்வகையில் சிறந்ததாகும்?" என்று கேட்டது தேவதை. (தொடரும்)

# மகாபாரதம்

**சாந்தி பர்வம்**

அருச்சுனன் கூறியது




"செயற்கரிய செயலை முடித்து அதனால் பெற்ற செல்வத்தை இழக்கக்கூடாது. உமது துயரம் என்னை வியக்க வைக்கிறது. பகைவரைக் கொன்று தருமத்தால் கிடைத்த பூமியை எப்படி விட்டுப்போவது? அஃது அறிவீனம்.

பயமும், சோம்பலும் உடையவர்க்கு ஏது அரச செல்வம்? உலகில் ஒன்றும் இல்லாதவன் தான் பிச்சை எடுத்து உண்பான்.

அவன் முயற்சியால் செல்வத்தை பெறமாட்டான். மிகப் பெரிய அரசசெல்வத்தை விட்டு விட்டு பிச்சை எடுத்து தவம் மேற் கொள்ளப் போகிறேன் என்ற உமது பேச்சை யாரேனும் ஏற்றுக் கொள்வார்களா?

எல்லா நன்மைகளையும் விட்டு விட்டு அறிவிலி போல் ஏன் பிச்சை எடுக்க வேண்டும்? அரும்பாடுபட்டு வெற்றி கொண்ட பின் ஏன் காடு நோக்கி செல்ல வேண்டும்? ஒன்றும் இல்லாமல் இருப்பது சாதுக்களுக்கு தருமம். ஆனால் அரச தருமம் அல்ல.

அரச தருமம் என்பது பொருளால் நடைபெறுவது. அரச தருமம் மட்டுமல்ல சாது தருமம் கூட பொருள் இல்லாது போனால் நிலை குலைந்து விடும்.

சாதுக்கள் சாது தருமத்தைக் காக்க இல்லறத்தார் துணை செய்வர். பொருள் இல்லையெனில் இல்லறத்தாரால் எவ்வாறு சாதுக்களுக்கு உதவ முடியும்.

எனவே உலகில் பொருள் இல்லாமை பாவம் ஆகும். பல்வேறு வகைகளில் திரட்டப் படும் செல்வமே எல்லா நன்மைகளும் பெருக காரணமாகிறது.

அண்ணலே பொருளிலிருந்து இம்மை இன்பம் கிடைக்கிறது. தருமம் பிறக்கிறது. இறுதியில் மறுமை இன்பமும் கிடைக்கிறது.

உலக வாழ்க்கை பொருள்இல்லாது மேன்மையுறாது. பொருளற்றவனின்முயற்சி கோடைகால நீர்நிலை போல் வற்றிப் போகும். ஒரு பயனும்தராது. எவனிடம் பொருள் உண்டோ அவனிடம் நண்பர்கள் இருப்பார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை.*
*– ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு ஓர் அன்பு மடல்

வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி மங்களேஸ்வரன் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக இருந்து தற்போது பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டுள்ள வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தாங்கள் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிற்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக தொடர்ந்தும் வவுனியா வளாகம் இருக்க வேண்டும் என்ற நினைப்பு தமிழ் மக்கள் பலரிடம் இருந்தது.

இதற்குக் காரணம் எங்கள் தமிழ்ப் பண்பாட்டுடன் கூடிய வளாகமாக அது இருக்க வேண்டும் என்பதாலாகும்.

பரவாயில்லை, வவுனியா பல்கலைக்கழகம் உதயமாகியிருப்பது மகிழ்வு. அதைவிட அதற்கு ஒரு தமிழர் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளமை இரட்டிப்பு மகிழ்வைத் தருவதாகும்.

இந்தப் பதவி நிலை தொடர வேண்டும் என்பது நம் வேணவா. இதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் தாங்கள் துணைவேந்தராக இருக்கும் காலத்தில் செய்ய வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

இதற்கு மேலாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக இருந்து பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்ட அடிப்படையில், வவுனியா பல்கலைக்கழகத்தின் வளாகம் முழுவதிலும் தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களும் திராவிடக் கட்டடக்கலை அம்சங்களும் மிளிர வேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடையாளமாக இருக்கின்ற நந்தி வவுனியா பல்கலைக்கழகத்தின் அடையாளமாகவும் இருக்க வேண்டும்.

தவிர, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சில தூரநோக்கற்ற செயற்பாடுகள் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இறையாண்மைக்கும் தனித்துவத்துக்கும் மிகப் பெரும் சவாலாக உள்ளன.

கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கக் கூடிய பொறியியல் பீடத்தின் நிர்வாகம், பௌத்த விகாரைக்கு முன்னுரிமை கொடுத்து சைவப் பெருவள்ளல் சேர் பொன்.இராமநாதன் அவர்களின் **திரிகரணசுத்தியும் காரிய சித்தியும்** என்ற சிந்தனைக்கு கருமை பூசியது.

இவ்வாறாக, ஆட்சியாளர்களின் ஆதரவுக்காக எங்கள் தமிழினத்தின் தனித்துவத்தை விட்டுக்கொடுக்காமல், வவுனியா பல்கலைக் கழகம் தமிழ் மன்னர்கள் ஆண்ட வன்னிப் பல்கலைக்கழகமாக விளங்க வேண்டும்.

ஆம், அம்பாறை ஒலுவிலில் எங்ஙனம் இஸ்லாமிய அடையாளங்களுடன் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் விளங்குகிறதோ அந்த அடிப்படையில், வன்னித் தமிழ் மண்ணின் – தமிழ் மன்னர்களின் அடையாளமாக வவுனியாப் பல்கலைக்கழகத்தை தாங்கள் ஆக்க வேண்டும் என்பதுதான் எம் தாழ்மையான கோரிக்கை.

# 248 கோவிட் தொற்றாளர்கள் மன்னாரில் அடையாளம்

(மன்னார்)

கொரோனா கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையத்தின் நாளாந்த அறிக்கையில் மன்னார் மாவட்டத்தில் 248 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் கடற்படை தளம் ஒன்றில் இருந்தே குறித்த தொற்றாளர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கையில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட தொகையே இதுவரை காணப்பட்ட அதிகமான தொகை என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-3.285)

### கட்டாரில் இருந்து நாடு கடத்தப்பட்டு கைதானவர்

# ஜனாதிபதி, சுமந்திரன் உட்பட பலரை குறிவைத்திருந்தாராம்

(கொழும்பு)

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் முகாமிலிருந்த நிலையில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பாரளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உட்பட பல முக்கிய பிரமுகர்களைப் படுகொலை செய்ய சூழ்ச்சி செய்தமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கட்டாரிலிருந்து அண்மையில் நாடு கடத்தப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த் பாக்கியதுரை நகுலேஸ்வரன் என்ற 41 வயது நபர், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

நாடு கடத்தப்பட்டிருந்த குறித்த நபர் முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்திலுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே கைதாகியிருந்தார். தற்சமயம் கொழும்பிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அழைத்து செல்லப்பட்டுள்ள அவர், தடுப்பில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் என்கிற கருணா அம்மான் உள்ளிட்டவர்களைப் படுகொலை செய்வதற்கு திட்டமிட்டிருந்தமை அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கட்டாரிலிருந்தபோது அதற்கான திட்டங்களை வகுத்திருந்ததாகவும், கட்டாரில் அதற்கான நிதியுதவியும் அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையிலேயே கட்டார் புலனாய்வுப் பிரிவு மற்றும் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் இலங்கை பயங்கரவாத விசாரணைப்பிரிவினர் அந்த நபரை கைது செய்து நாடு கடத்தியதோடு தற்போது கொழும்பில் வைத்து மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே குறித்த நபர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்வதற்கு முயற்சித்த குற்றச்சாட்டும் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** தென்னியங்குளம், தென்னியங்குளம் தேவாலயத்தடி, உயிலங்குளம், வேட்டையடைப்பு ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம்- மணியர் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சத்திய தரிசனம்



## கடவுள்மீது ஒருமுகப்பட்ட அன்புகொள்

அன்பின் வடிவங்களே!

- சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான வேறுபாட்டை மனிதன் புரிந்து கொள்ள முயலவேண்டும். மனிதன் தன் பகுத்தறிவை இழந்துவிட்ட காரணத்தால் உண்மையைப் பொய் எனவும் பொய்யை உண்மை எனவும் கருதுகிறான்.
- பிரபஞ்சம் முழுவதிலும் தெய்வீகம் வியாபித்துள்ளது. பிரபஞ்சத்தைத் தவிர வேறு பேரண்ட வடிவம் இல்லை.
- பிரபஞ்சமே அண்ட வடிவம். மனிதன் கடவுளின் ஓர் வடிவம். இந்த உண்மையை நீ உணர்ந்தால் உன்னுள் மனிதருக்கான குறைபாடுகள் எழமாட்டா. அப்போது உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் இருக்காதுஇ
- ஒவ்வொருவருமே தெய்வீகமானவரே. நீ உடலல்ல, நீ ஆத்மா; அதாவது நீ சனாதனமானவன், நிரந்தரமானவன்.
- "நான் கடவுள்" என்னும் உறுதியான நம்பிக்கையைக் கொள். இதனை நீ அனுபூதியாகப் பெறும்போது உலகிலுள்ள அனைத்துமே உனக்கு தூயதாகவும் புனிதமானதாகவும் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2021-16.08.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைப்பீர்கள்!






**தனக்கென ஒரு பாதையை உருவாக்கும் மேஷ இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் 4 ஆம் இடத்தில் நீச்சம் பெற்று, உங்கள் இராசிக்கு தன-சப்தமாதிபதியான சுக்கிரனோடும், பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியான சூரியனோடும் இணைந்து சஞ்சரிக்கின்றார். எனவே இந்த மாதம் இனிய மாதமாகவே அமையும்.

தொழில் ஸ்தானத்தில் சனி வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். அவரை இராசிநாதன் செவ்வாய் நீச்சம் பெற்று பார்த்தாலும் அவரோடு தனாதிபதியான சுக்கிரனும் பஞ்சமாதிபதியான சூரியனும் இணைந்து பார்ப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வரலாம். பணியாளர்களைப் புதிதாக நியமித்து, பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொள்வீர்கள்.

9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்கிரம் பெற்றிருப்பதால், பெற்றோர் வழியில் கொஞ்சம் அனுசரிப்பு குறையலாம்.

பூர்வீக சொத்தை பாகப்பிரிவினை செய்து கொள்வதில், சகோதரர்களுக்குள் பிரச்சினைகள் வரக்கூடும். எனவே பொறுமையாகச் செயற்படுங்கள். அஷ்டமத்தில் கேது இருப்பதால், ஒருசிலருக்கு இட மாற்றங்கள், வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் அமையலாம். ஆரோக்கியத்தில் ஏற்படும் அச்சுறுத்தல்களை, ஆகாரக் கட்டுப்பாட்டால் சரி செய்வீர்கள்.

**சிம்ம சுக்கிரனும் கன்னி சுக்கிரனும்**

ஜூலை 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். புத்திர ஸ்தானத்திற்கு சுக்கிரன் வரும்பொழுது, பிள்ளைகளுக்கான வேலைவாய்ப்பு கைகூடும். மாலை சூடி மகிழும் வாய்ப்பும் நிறைவேறும். ஓகஸ்ட் 12 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செல்லும் சுக்கிரன், அங்கு நீச்சம் பெறுகின்றார். தனாதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. எனவே பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படும்.

**கடக புதன் சஞ்சாரம்**

சகாய ஸ்தானாதிபதியான புதன், ஜூலை 19 ஆம் திகதி கடக இராசிக்குச் செல்கிறார். அங்குள்ள சூரியனோடு இணைந்து 'புத ஆதித்ய' யோகத்தையும் சுக்கிரனோடு இணைந்து 'புத சுக்கிர' யோகத்தையும் ஏற்படுத்துகின்றார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கட்டடப் பணிகளில் இருந்த தடைகள் அகலும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**சிம்ம செவ்வாய் சஞ்சாரம்**

ஜூலை 21 ஆம் திகதி சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். இதுவரை செவ்வாய்- சனி பார்வை இருந்தது. அதனால் சகோதர வழியிலும் ஆரோக்கியத்திலும் பிரச்சினைகளைச் சந்தித்திருப்பீர்கள். அதில் இருந்து விடுபட்டு நிம்மதியடையும் வகையில், ஜூலை 21 ஆம் திகதி சிம்ம இராசிக்கு செவ்வாய் பெயர்ச்சியாகிறார். இதனால் குடும்பப் பிரச்சினைகள் குறையும். இல்லம் கட்டிக் குடியேறும் எண்ணம் உதிக்கும். நல்ல சம்பவங்கள் பலவும் நடைபெறும் நேரம் இது. பொருளாதார நிலை உயரும். இம்மாதம் அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

பொருளாதாரப் பற்றாக்குறை அகலும் மாதம் இது. அருளாளர்களும் அனுபவஸ்தர்களும் சொல்லும் ஆலோசனைகள், உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து, நல்ல தகவல் இல்லம் தேடிவரும்.

பணிபுரியும் பெண்களுக்கு, கேட்ட சலுகைகள் கிடைக்கும். அரசு வழி அனுகூலம் உண்டு. பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.

## திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள்






**மற்றவர்கள் வெற்றிக்கு யோசனைகளைச் சொல்லும் ரிஷப இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், சுகாதிபதி சூரியனோடும், சப்தம- விரயாதிபதியான செவ்வாயோடும் இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். குருவின் பார்வை தன ஸ்தானத்திலும் சுகஸ்தானத்திலும் ஜீவனஸ்தானத்திலும் பதிகின்றது. எனவே தேவைக்கேற்ற வருமானம் வந்து கொண்டேயிருக்கும். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள்.

தொழில் ஸ்தானத்தில் குரு பகவான் வக்கிரம் பெற்றிருக்கின்றார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகைக் கிரகமாவார். எனவே அவர் வக்கிரம் பெற்றிருப்பது ஒருவழிக்கு நன்மைதான். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் கிடைக்கலாம். பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேரும் சூழ்நிலை உருவாகும்.

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் சனி பகவான் வக்கிரம் பெறுகின்றார். எனவே உடன்பிறப்புகளுக்குள் மனக்கசப்புகள் ஏற்படலாம். உத்தியோகம் மற்றும் தொழிலில் கொடுக்கப்பட்ட வேலைகளை நீங்களே செய்வது நல்லது. ஜென்மத்தில் இராகுவும் 7 இல் கேதுவும் இருப்பதால் குடும்பத்தில் ஏற்றமும் இறக்கமும் கலந்த சூழ்நிலையே நிலவும். கைகளில் புரளும் தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை வந்து சேரும்.

**சிம்ம சுக்கிரனும் கன்னி சுக்கிரனும்**

ஜூலை 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் சுகஸ்தானத்திற்கு வரும்போது, பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கொடுக்கல்-வாங்கலை ஒழுங்கு செய்வீர்கள். ஓகஸ்ட் 12 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செல்லும் சுக்கிரன், அங்கு நீச்சம் பெறுகிறார். இந்த நேரத்தில் மிகவும் விழிப்போடு செயற்பட வேண்டும். ஆரோக்கியத்திலும் அக்கறை தேவை. ஒரு கடனை அடைக்க, மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உண்டு.

**கடக புதன் சஞ்சாரம்**

ஜூலை 19 ஆம் திகதி, கடக இராசிக்குப் புதன் செல்கின்றார். இது நல்ல நேரம்தான். எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். உடன்பிறப்புகளின் திருமண வைபவங்கள் சிறப்பாக நடைபெறும். வழக்குகள் சாதகமாகும். வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். படிப்பை முடித்த உங்களது பிள்ளைகளுக்கு, நல்ல வேலை கிடைக்கும். கூட்டுத் தொழில் புரிவோர் தனித்து இயங்க சந்தர்ப்பம் கைகூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள், சுய தொழில் செய்வது பற்றி சிந்திப்பார்கள்.

**சிம்ம செவ்வாய் சஞ்சாரம்**

ஜூலை 21 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். இக்காலம் உங்களுக்கு இனிய காலமாக அமையும். இதுவரை சனியின் பார்வையில் இருந்த செவ்வாய் இப்பொழுது விலகுகிறது. 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், 4 ஆம் இடத்திற்கு வரும் பொழுது குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். காரியங்கள் தடையின்றி நடைபெறும். குருவின் பார்வையும் செவ்வாய் மீது பதிவதால் 'குரு மங்கள யோகம்' ஏற்படுகின்றது. எனவே இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். ஒரு சில காரியங்களில் தடைகள் ஏற்பட்டாலும் கடைசி நேரத்தில் காரியம் கைகூடிவிடும். பணிபுரியும் பெண்களுக்கு யோகமான நேரம் இது. அரசு வேலைக்காக எடுத்த முயற்சி கைகூடலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## +1453...

யல் பிரிவு விடுத்துள்ள பிந்திய அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 278, 972 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கோவிட்டால்...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பெண்கள் 19 பேர், ஆண்கள் 18 பேர் என மேலும் 37 கோவிட்-19 மரணங்கள் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 3,611 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனாவால்...

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 63 வயதுடையவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த நபரின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## எதிர்வரும் செப்...

தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிடும்போதே சவேந்திர சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

செப்ரெம்பர் மாதத்திற்குள் தடுப்பூசி பெற தகுதியான அனைத்து மக்களுக்கும் குறைந்தது ஒரு தடுப்பூசியை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கோவிட் தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றுக்கொண்ட வெளிநாட்டவர்கள் பி.சி.ஆர் பரிசோதனையின் பின்னர் நாட்டிற்குள் நுழைய அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் உருமாறி வருகிறது. நிலைமைகள் மாறுபடுகின்றன. இந்நிலையில் அவ்வப்போது இருக்கும் நிலைமைகளின் அடிப்படையிலேயே இறுதி முடிவுகள் எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

தடுப்பூசி பெறத் தகுதியுடைய அனைவருக்கும் குறைந்தது ஒரு தடுப்பூசியைப் போடும்பணிகள் நிறைவு பெற்றால் நாட்டை முழுவதுமாக மீண்டும் திறப்பதற் கான வாய்ப்பு ஏற்படும் எனவும் ஜெனரல் சவேந்திர சில்வா நம்பிக்கை தெரிவித்தார். (ம-3)

## குடும்பப் பெண்...

ணொருவர் இரண்டு ஆண்கள் என மூவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் குடும்பஸ்தர் ஒருவரின் வீட்டிற்குள் புகுந்த இளைஞர் குழு அங்கிருந்த உந்துருளிகள், பொருட்களை வாளால் வெட்டி சேதப்படுத்தியுள்ளதுடன் இளம் குடும்பப் பெண் ஒருவர் மீதும் மேலும் இரண்டு ஆண்கள் மீதும் வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த மூவரும் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டுடன் சம்பந்தப்பட்ட 5 பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-3,281)

## வடமராட்சியில்...

பருத்தித்துறை நகர், முதலாம் குறுக்குத் தெரு, 2ஆம் குறுக்குத் தெரு மற்றும் மூன்றாம் குறுக்குத் தெரு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 156 பேருக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அறிக்கை நேற்று புதன்கிழமை இரவு கிடைக்கப்பெற்றது.

இதில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொலிஸார் ஒருவர் உட்பட 18 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்த சுகாதாரத் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சந்தேகத்தின் அடிப்படையில் 156 பேரிடம் நேற்று முன்தினம் பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டன.

அவர்களில் 29 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் 32 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 9 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்று பிசிஆர் பரிசோதனையை முன்னெடுத்துள்ளார். அவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்றுமுன்தினம் 9 பேருக்கு தொற்றுள்ளமை பிசிஆர் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. (ம-3,18,33,60)

## ஆண் ஒருவரின்...

திற்கு அருகாமையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலமானது பட்டிக்குடியிருப்பு கிராமஅலுவலர் பிரிவினைச் சேர்ந்த செல்லத்துரை நவரட்ணம் (வயது - 60) என்பவரு டையது என இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை, தனது மாடுகளைப் பார்ப்பதற்காகச் சென்ற நிலையில், இலங்கட்டிகுளத்தின் அணைக்கட்டிற்கு அருகாமையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மரணச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## 12 பேருக்கு...

களையும் பெற்றுக்கொண்ட மருத்துவர் ஒருவர் உட்பட 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று கிடைக்கப்பெற்ற பிசிஆர் பரிசோதனை முடிவின்படி கிளிநொச்சியில் 10 பேரும் அதில் வட்டக்கச்சியில் 6 பேரும் பூநகரியில் இரண்டு பேரும் கிளிநொச்சி நகர்ப்பகுதியில் இருவருக்கும் கொரோனாத் தொற்றுஉறுதி செய்யப்பட்டது.

அதேபோல் கண்டாவளை சுகாதார பிரிவில் உள்ள நீராவி பகுதி கிராம அலுவலர் பிரிவில் ஒருவரும் கல்மடுநகர் கிராமஅலுவலர் பிரிவில் ஒருவரும் 2 பேர் தொற்று உறுதி செய்யப்பட்டனர்.

இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 12 பேருக்கு தொற்றுஉறுதி செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார். (ம-3,316)

## இராஜதந்திரி...

ஜேர்மனி, சீனா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர்கள், பிரித்தானியா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் உயர்ஸ்தானிகர்களும் நேற்று நிதியமைச்சரை சந்தித்தனர்.

இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் பசுமைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அதீத கவனம் செலுத்தியதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், மீள்புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை ஊக்குவிப்பதற்கு ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு வர்த்தகத்தினை மிகுந்த ஒத்துழைப்புடன் முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் இதன்போது இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிர்காலத்திலும் தடுப்பூசிவசதிகளை வழங்குவதாக சீன தூதுவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## இலங்கையில்...

கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை தற்போது 430 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான கடன்களை மீளச்செலுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றது. இவ்வாறானதொரு நெருக்கடி நிலையில் சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, எதிர்வரும் 2 - 3 வருட காலத்திற்கு அவசியமான நிதியுதவிகளை அதனிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார் (ம-3)

## வடக்கில் நேற்று...

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 53 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 65 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 53 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 04 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 246 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 38 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## கோவிட் அச்சம்...

கள் அடையாளங்காணப்பட்டிருக்கும் நிலையில், மேலும் பல டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கக்கூடும்.

எனவே பொதுமக்கள் உரிய சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி அவதானத்துடன் செயற்படாவிட்டால், இந்த டெல்டா வைரஸ் காரணமாக கொரோனா வைரஸ் பரவலின் நான்காவது அலைக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையேற்படலாம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினரான வைத்திய நிபுணர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம-3)


மெகா பவர்
திகதி 14/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0853
வெற்றி எழுத்து M சுப்பர் இலக்கம் 22 வெற்றி இலக்கங்கள் 19 34 48 57

மஹஜன சம்பத
திகதி 2021/07/14
சீட்டிழுப்பு இலக்கம் 4505
ஆங்கில எழுத்து N வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 6 8 0 8 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 14.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2800
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 35 38 58 64
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.07.14
சீட்டிழுப்பு இலக்கம் - 535
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 46 51 53 58
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1308
வர்ணம் : இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 14.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,000,000
வெற்றி இலக்கங்கள் 02 29 51 52 ஆங்கில எழுத்து W
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3643
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 14.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 43,151,802
வெற்றி இலக்கங்கள் 32 52 54 74 ஆங்கில எழுத்து T
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 4,490,211/=
திகதி : 14.07.2021
வெற்றி வாரம் : 3194
வர்ணம் : பச்சை
வெற்றி இலக்கங்கள் 02 30 48 55 மகரம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,578,640/=

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1482 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 14/07/2021 தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் E 04 31 33 34
அடுத்த சுப்பர் ஜக்பொட் 58,531,263/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Physics** (English Medium)

**Group Classes**

**A/L 2023 batch**
**Mechanics starts**
**on 17/07/2021 - Saturday**


Now, On Zoom

**By : M.Jeya** (B.Sc, PGED)

(7221)

**076 294 3565**

No: 209, Palaly Road, Kondavil
East, Kondavil

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாய க்க நேற்று கொரோ னாத் தடுப்பூசி பெற் றுக் கொண்டார்.

(ம-03)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதான 2 இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.

(7222)

**075 883 0107**

## வேலையாட்கள் தேவையா?

Field Officer, Driver, வீட்டுப் பணிப் பெண்,... உட்பட ஏனைய வேலை யாட்களைப் பெற DEWMAS Job Bank. யாழ். வேலை வாய்ப்புகளுக்கு dewmasweb.com

(7214)

**074 138 3368**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-1000/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-2308)

**0768226240** DHL

**அண்ணா** EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

**3-6** நாட்கள்

லண்டன் 1000/=

070 3305500
077 888 9388

(C-2307)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

# THANGAM'S PLACE

## கடைகள் வாடகைக்கு

மந்திகை அரசினர் வைத்திய சாலை தலைவாசலுக்கு முன்பாக அமைந்துள்ளது.

» வாகன தரிப்பிடம் வசதிகளைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

» மலசலகூடம், தண்ணீர் வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

PULOLY











தொடர்புகளுக்கு

குணம் (Srilanka) +94 769 791 508

தங்கவடிவேல் (Swiss) +41 76 46 46 827

(C-2354)

## கணனி திருத்தம்

Laptop விலைக்கு வாங்கப்படும்.

உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம். கணனிகள் விற்றல், வாங்குதல், பழைய கணனிகளும் Laptop களும் வாங்கப்படும்.

(7226)

தொடர்புகளுக்கு

**NPO Computer System - 077 243 8537**

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தில் முதலாம் ஒழுங்கையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு.
(2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)

1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்

(யாழ். - மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரத்தில்)

தொடர்பு நேரம் : 9.30 a.m - 5.00 p.m

(7227)

**076 221 2037, 076 734 1023**
**077 064 2661**

# IELTS

DMI COMPUTER EDUCATION

0777 17 35 17
0777 24 07 07

- # Unique Test Tips
- # 40 hrs with free 4mock exam
- # Latest course Material (Book 15)

Academic or General

**IELTS Life Skills - A1**

திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும் (C-2350)

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

**DIPLOMA IN ENGLISH**
**SPOKEN ENGLISH**

புதிய பிரிவு ஆரம்பம் 15/7/2021 ZOOM Online

German - Germany, Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deutsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |


# கண்ணீர் அஞ்சலி

## திருமதி பரமேஸ்வரி புண்ணியமூர்த்தி

புண்ணியமூர்த்தி ரீச்சர்
(ஓய்வுநிலை ஆசிரியை)



அன்னை மடியில் : 24.05.1936

ஆண்டவன் அடியில் : 14.07.2021

பாசமுள்ள எங்கள் அம்மம்மாவே
அன்பால் எங்களைக் காத்தவளே
பாசம் காட்டி எங்களை வளர்த்தவளே!

அன்பான எங்கள் பொக்கிஷத்தை
ஆண்டவனே பறித்தானே
உங்களின் பிரிவால் ஏங்கித் தவிக்கின்றோம் அம்மம்மா!

எங்களையெல்லாம் கண்ணீர்க் கடலில் மூழ்க விட்டு
எங்கு சென்றீர்கள் அம்மம்மா!
ஆயிரம் உறவுகள் அரவணைக்க இருந்தாலும்
அம்மாவின் அன்போடு உன் அன்பும் ஈடாகுமோ அம்மம்மா!!

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்,

உரும்பிராய். வீரடி என்ஜினியரிங் நிறுவன உரிமையாளர்.

(C-2356)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.